தினமணி

**தமிழகத்துக்கு வறட்சி நிவாரண நிதி: மத்திய அரசுக்கு கருணாநிதி கோரிக்கை**

தமிழகத்துக்கு கணிசமான அளவு வறட்சி நிவாரண நிதி வழங்க வேண்டும் என்று மத்திய அரசை திமுக தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை: விவசாயிகளுக்கான வறட்சி நிவாரணத்தை முதல்வர் ஜெயலலிதா இரண்டு கட்டமாக அறிவித்தார். மத்திய அரசு ரூ.19 ஆயிரத்துத்து 665 கோடி நிவாரண நிதி வழங்க வேண்டும் என்றும் முதல்வர் கோரியிருந்தார்.

இந்த நிலையில் மத்திய அரசில் இருந்து தமிழகத்தின் வறட்சி பகுதியைப் பார்வையிடுவதற்காக வறட்சி நிவாரணப் பார்வையாளர்கள் குழு ஒன்று தமிழகம் வந்துள்ளது.

வறட்சி ஏற்பட்டது கடந்த ஆண்டு. அதற்கு முதல்வர் நிவாரணம் அறிவித்தது கடந்த மாதம். மத்திய அரசின் வறட்சி நிவாரணப் பார்வையாளர்கள் குழு வருகை புரிந்துள்ளது இந்த மாதம்.

ஆனால் நல்லவேளையாக கடந்த ஆண்டு தொடங்கிய வறட்சி நிலை இன்னும் நீடித்த நிலையில்தான் உள்ளது. எனவே, வறட்சியைப் பார்வையிட வந்தது வரவேற்கத்தக்க ஒன்றுதான்.

ஆனால் பார்வையாளர்கள் குழு வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட்டது பற்றி இரண்டு நாள்களாக வரும் செய்திகள் பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் அளிப்பதாக இல்லை.

மாநில அரசின் அதிகாரிகள் எங்கெங்கு அழைத்துச் செல்கிறார்களோ அங்குதான் பார்வையாளர்கள் குழுவும் செல்கிறது. உண்மையாகவே வறட்சி பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வருவதில்லை என்று விவசாயிகள் குமுறுகின்றனர்.

மணக்குடியைச் சேர்ந்த விவசாயிகள் வறட்சி நிவாரணப் பார்வையாளர்களிடம் ஏக்கர் ஒன்றுக்கு பயிர் இழப்பீட்டு நிவாரணம் ரூ.20 ஆயிரம் வழங்க வேண்டும்.

நிவாரணத் தொகையுடன் காப்பீட்டுத் தொகை ரூ.8,400-யை மாநில அரசு இணைத்துக் கொண்டது ஏற்புடையது இல்லை.

அந்த நிதியை மத்திய அரசு தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்க வேண்டும் என்றெல்லாம் கோரிக்கை வைத்துள்ளனர்.

எனவே, மத்திய அரசின் வறட்சி நிவாரண பார்வையாளர் குழுவினர் மத்திய அரசின் சார்பில் நிவாரணத் தொகையை கணிசமாக மாநில அரசுக்கு அளித்திட பரிந்துரை செய்வதோடு, விவசாயிகளின் இந்த முக்கிய கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

**வறட்சி நிவாரணமாக ரூ.19,665 கோடி தேவை**

தமிழகத்தில் வறட்சி நிவாரணமாக ரூ.19 ஆயிரத்து 665 கோடி தேவை என மத்தியக் குழுவிடம் முதல்வர் ஜெயலலிதா வலியுறுத்தினார்.

வறட்சி பாதித்த பகுதிகளைப் பார்வையிட பிரவேஷ் சர்மா தலைமையிலான மத்தியக் குழு தமிழகம் வந்தது. டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் அந்தக் குழு இரண்டு நாள்களாக ஆய்வு நடத்தியது. இதன் பின் சென்னை திரும்பிய அந்தக் குழுவினர் முதல்வர் ஜெயலலிதாவை தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை காலை சந்தித்துப் பேசினர்.

இது குறித்து, தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பு:

கிராம அளவில் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், பொது விநியோகத் திட்டம், சுகாதார வசதிகள் ஆகியன தமிழக அரசால் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருவதற்கும், கூட்டுறவுக் கடன்கள், வறட்சி காரணமாக தமிழக அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு மத்திய குழுவினர் தங்களது பாராட்டுக்களைத் தெரிவித்தனர். இதற்கு நன்றி தெரிவித்த முதல்வர் ஜெயலலிதா, மாநில அரசின் நிதி ஆதாரங்களுக்கு உள்பட்டு மாநில அரசால் எடுக்கக் கூடிய அனைத்து நடவடிக்கைகளும் மாநில அரசு மேற்கொண்டுள்ளதாகவும், தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியைச் சமாளிக்க மாநில அரசு வறட்சி மனுவில் கோரியுள்ள ரூ.19,665 கோடியை நிதியுதவியாக மத்திய அரசு வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

விரைவில் அறிக்கை: முதல்வர் ஜெயலலிதா தெரிவித்த கருத்துகளை தாங்கள் மத்திய அரசுக்கு விரைவில் அளிக்கவுள்ள அறிக்கையில் பரிந்துரை செய்வதாக மத்தியக் குழுவின் தலைவர் பிரவேஷ் சர்மா தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் மூத்த அமைச்சர்கள் ஓ.பன்னீர்செல்வம், நத்தம் விஸ்வநாதன், கே.பி.முனுசாமி, வைத்திலிங்கம், தலைமைச் செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன், வருவாய் நிர்வாக ஆணையாளர் டி.எஸ்.ஸ்ரீதர், வருவாய்த் துறை செயலாளர் ராஜீவ் ரஞ்சன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**சிறு தானிய பயிர்கள்சாகுபடி விழிப்புணர்வு**

விழுப்புரம் மாவட்டம் கோட்டகுப்பத்தில் உழவர் பெருவிழா அண்மையில் நடைபெற்றது.

ஒன்றியப் பெருந்தலைவர் சிவா தலைமை வகித்தார். உழவர் ஆர்வலர் குழு தலைவர் கணபதி, கோட்டகுப்பம் பேரூராட்சி தலைவி ரபித்தல் பஷியா முன்னிலை வகித்தனர்.

வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் பேசினார். கோட்டகுப்பம் பேரூராட்சி செயலர் கணேசன், ஒன்றிய துணைத் தலைவர் சாமிநாதன், நெசல் ஊராட்சித் தலைவர் கோவிந்தன், கவுன்சிலர் அங்கையற்கன்னி முருகன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தோட்டக்கலைத்துறை சார்பில் தானே புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் 252 பேருக்கு முந்திரி சாகுபடிக்கான உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. விவசாயிகளுக்கு சிறுதானியப் பயிர்கள் சாகுபடி குறித்த விழிப்புணர்வு அளிக்கப்பட்டது.

**பால் பண்ணை அமைத்தோருக்கு மானியம்**

புதுச்சேரியில் வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பால்பண்ணை அமைத்தோருக்கான 50 விழுக்காடு மானியத்தொகையை முதல்வர் என்.ரங்கசாமி புதன்கிழமை வழங்கினார்.

புதுச்சேரி அரசு கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலத்துறை மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதன் ஒரு பகுதியாக, மத்திய அரசின் வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் 50 விழுக்காடு மானியத்தில் 3 பசுக்களைக் கொண்ட ஒரு சிறு பால் பண்ணை அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதற்காக, கால்நடை வளர்ப்போரில் இருந்து 400 பேர் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

இதில் முதல்கட்டமாக 249 பேர் முதல்கட்டமாக தேர்வு செய்யப்பட்டு, அவர்களில் 27 பேர் பால் பண்ணை அமைக்கும் திட்டத்தை முடித்துள்ளனர்.

இவர்களுக்கு 50 விழுக்காடு மானியமாக ரூ.13.50 லட்சத்தை முதல்வர் என்.ரங்கசாமி

அளித்தார்.

மேலும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள கால்நடை வளர்ப்போருக்கு 50 விழுக்காடு மானியத்தில் ஒரு கறவை மாடு வாங்க 560 பேர் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

இதில் 515 பேர் முதல்கட்டமாக தேர்வு செய்யப்பட்டனர். இவர்களில் 47 பேருக்கு கால்நடைகள் வழங்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு 50 விழுக்காடு மானியமாக ரூ.5.87 லட்சத்தையும் முதல்வர் வழங்கினார்.

பிப்டிக் தலைவர் அங்காளன் எம்.எல்.ஏ., இயக்குநர் பெ.பத்மநாபன், இணை இயக்குநர் மனோகரன், மருத்துவர்கள் ராஜீவ், ராணி, சையத் அலி உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

**பசுந்தேயிலைக்கு குறைந்த விலை**

கூட்டுறவுத் தேயிலை ஆலைகளில் கடந்த மாதத்தைவிட பசுந்தேயிலை விலை குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதால் விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள 15 கூட்டுறவுத் தேயிலை ஆலைகளில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு, குறு விவசாயிகள் அங்கத்தினர்களாக சேர்ந்து பசுந்தேயிலை விநியோகம் செய்து வருகின்றனர். அங்கத்தினர்களிடம் கொள்முதல் செய்யும் பசுந்தேயிலைக்கு குன்னூர் இண்ட்கோ சர்வ் நிர்வாகத்தின் மூலமாக விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

முதல் மாதத்தில் அங்கத்தினர்களிடம் கொள்முதல் செய்த பசுந்தேயிலைக்கு, அந்த மாதத்தில் விற்பனையான தேயிலைத் தூளின் விலையை கணக்கில்கொண்டு உற்பத்தி, நிர்வாகம் செலவுகளை கழித்து விலை நிர்ணயிக்கப்படுகிறது.

அதன்படி, கடந்த ஏப்ரல் மாதம் கொள்முதல் செய்த பசுந்தேயிலைக்கு கூட்டுறவு ஆலை நிர்வாகங்கள் நிர்ணயித்துள்ள விலை விவரம்:

பந்தலூர், சாலீஸ்பரி கூட்டுறவுத் தேயிலை ஆலைகள்-ரூ.17.50, மஞ்சூர், பிக்கட்டி, கைகாட்டி, மகாலிங்கா, குந்தா, கரும்பாலம், பிதர்காடு, எருமாடு, எப்பநாடு கூட்டுறவுத் தேயிலை ஆலைகள்-ரூ.17, மேற்குநாடு, கிண்ணக்கொரை, இத்தலார் கூட்டுறவுத் தேயிலை ஆலைகள்-ரூ.16.50.

கட்டபெட்டு கூட்டுறவுத் தேயிலை ஆலையில் வார விலை வழங்குவதால், மாதாந்திர விலை நிர்ணயம் செய்யப்படுவதில்லை. கடந்த மார்ச் மாதம் அனைத்து ஆலைகளிலும் ரூ.20.50 விலை வழங்கிய நிலையில், தற்போது ரூ.2 முதல் 3.50 வரை விலை குறைவாக நிர்ணயித்திருப்பது விவசாயிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

**அனைத்துப் பயிர்களுக்கும் நிவாரணம் தேவை: மத்திய குழுவிடம் கோரிக்கை**

புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்துப் பயிர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என மத்தியக் குழுவிடம் வலியுறுத்தப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் காவிரி நீர் பாயும் டெல்டா பகுதிகளில் ஏற்பட்டுள்ள வறட்சி பாதிப்புகளை மத்தியக் குழுவினர் புதன்கிழமை ஆய்வு செய்தனர்.

மத்திய திட்டக் குழுவின் துணை ஆலோசகர் (வேளாண்) மானேஷ் சௌத்ரி தலைமையில் சென்னை புகையிலை மேம்பாட்டுக் கழக இயக்குநர் (பொ) கே. மனோகரன், மத்திய அரசின் நிதித் துறை துணை இயக்குநர் வி. ஸ்ரீகாந்த், மின் துறை துணைச் செயலர் ஜி.ஜே. ஜோஷ், கோவை காவிரி மற்றும் தென்னக நதிகள் அமைப்பின் கண்காணிப்புப் பொறியாளர் ஆர். சுந்தரமூர்த்தி உள்ளிட்ட குழுவினர் புதன்கிழமை ஆய்வைத் தொடங்கினர்.

அறந்தாங்கி நகராட்சியில் ரூ. 24 லட்சத்தில் வறட்சி நிவாரண நிதியின் கீழ் கோபாலபுரம், நாடிமுத்து, எல்.என். புரம் ஆகிய 3 மேல்நிலைநீர் தேக்கத்தொட்டிகள் அமைந்துள்ள இடங்களில் தலா ரூ. 8 லட்சத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன. இதில் கோபாலபுரம் ஆழ்குழாய் கிணறு பணியை மத்திய குழுவினர் பார்வையிட்டனர்.

ஆய்வு மாளிகையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் மு. மாதவன், இந்திய கம்யூனிஸ்ட் மாவட்டச் செயலர் த. செங்கோடன் ஆகியோர் புதுக்கோட்டை மாவட்டத்தில் மாநில அரசு குறைந்த அளவே நெல்லுக்கு மட்டும் நிவாரணம் வழங்கியுள்ளது,

பாதிக்கப்பட்ட அனைத்துப் பயிர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். மேலும் அனைத்துப் பயிர்களுக்கும் ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரமும், விவசாயத் தொழிலாளர்களுக்கு தலா ரூ. 10 ஆயிரமும் வழங்க வேண்டும் என மத்திய குழுவினரிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

பின்னர் நாகுடியில் கல்லணைக் கால்வாய் காவிரி நீர்பாசனதாரர் சங்கத் தலைவர் அத்தாணி ராமசாமி தலைமையிலான விவசாயிகள், காவிரியில் போதுமான அளவு தண்ணீர் வராததால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே மத்திய அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர்.

பின்னர் பொதுப்பணித் துறை அலுவலகத்தில் வறட்சி நிவாரணத் திட்ட நிதியின் கீழ் நடைபெற்ற கால்நடை முகாமில் சிறப்பாகப் பராமரிப்பு செய்த கால்நடை உரிமையாளர்களுக்குப் பரிசுகளை மத்திய குழுவினர் வழங்கினர்.

குழுவினர் தெரிவித்தது: மாநில அரசின் கோரிக்கைப்படி வறட்சி பாதித்த பகுதிகளைப் பார்வையிட்டு மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பவுள்ளோம். வறட்சி நிவாரண நிதியின் கீழ் குடிநீருக்கு மாநில அரசு முக்கியத்துவம் கொடுத்து அதிக நிதி ஒதுக்கியுள்ளது. நிவாரணம் குறித்து மத்திய அரசுதான் முடிவு செய்ய வேண்டும் என்றனர்.

குழுவினரிடம் வறட்சி பாதிப்புகள் குறித்து மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் விளக்கினார். அறந்தாங்கி வருவாய்க் கோட்டாட்சியர் க. துரை, வட்டாட்சியர் கோ. தவச்செல்வம், நகராட்சி ஆணையர் ப. அசோக்குமார், ஊராட்சி ஒன்றிய ஆணையர் சு. தனபாலன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வடகாட்டில் உழவர் பெருவிழா**

ஆலங்குடி அருகேயுள்ள வடகாடு முத்துமாரியம்மன் கோவிலில் செவ்வாய்க்கிழமை உழவர் பெருவிழா நடைபெற்றது.

வேளாண் உதவி இயக்குநர் ராம. சிவக்குமார் தலைமை வகித்தார். ஊராட்சித் தலைவர் என். கனகராஜ், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் சி. சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் வேளாண் துணை இயக்குநரும், ஆட்சியரின் நேர்முக உதவியாளருமான (வேளாண்) பெ. நாகேந்திரன், விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு கையேடுகளை வழங்கிப் பேசியது:

இயற்கை சாதகமாக இல்லாத நிலையில் விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில் செயலாகும் தமிழக அரசின் திட்டங்களைப் பெற உரிய ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட அலுவலகத்தை அணுக வேண்டும். பயிர் சாகுபடிக்கான அனைத்து ஆலோசனைகளும் இலவசமாகவே அளிக்கப்படும் என்றார்.

முன்னதாக வடகாடு கடைவீதியில் இருந்து மாரியம்மன் கோவில் வரை இயற்கையோடு இயைந்து வாழக் கோரி பெண்கள் பேரணியாகச் சென்றனர்.

நிகழ்ச்சியில் மண் பரிசோதனை செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. பல்வேறு துறை அலுவலர்கள் பேசினர். ஏற்பாடுகளை வேளாண் உதவி அலுவலர்கள் செய்தனர்.

**வறட்சி நிவாரணத்தில் பாரபட்சம் கூடாது**

ஆலங்குடி பகுதியில் அரசால் வழங்கப்படும் வறட்சி நிவாரணத்தை பாரபட்சமின்றி வழங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பருவ மழைக் குறைவு, மும்முனை மின்சாரம் 20 மணியிலிருந்து 3 மணி நேரமாகக் குறைப்பு ஆகியவற்றால் விவசாயிகள் பெருமளவில் பாதுக்கப்பட்டுள்ளனர்.

வறட்சி பாதிப்புக்கு நிவாரணம் வழங்கப்படுமென்ற தமிழக அரசின் அறிவிப்பு விவசாயிகளுக்கு ஆறுதலை அளித்துள்ளது.

இருப்பினும் ஆலங்குடி பகுதியில் பெரும்பாலான கிராமங்களில் வறட்சியால் பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் பட்டியலில் பெயர் இல்லை.

ஆகையால், தமிழக அரசு வறட்சியால் பாதிப்புக்குள்ளான விவசாயிகள் அனைவருக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். இப்பகுதியையும் மத்திய ஆய்வுக் குழு ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம்: 22.11 அடி**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 22.11 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 56 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதிப்பிலிருந்து மீட்கும் நிவாரணத் திட்டங்கள் தேவை: மத்திய குழுவினரிடம் விவசாயிகள் கோரிக்கை**

டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதிப்பிலிருந்து முழுமையாக மீட்டெடுக்கும் வகையிலான நிவாரணத் திட்டங்களை பரிந்துரைக்க வேண்டும் என, மத்திய குழுவிடம் நாகை விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

மத்திய திட்டக் குழு (வேளாண் பிரிவு) துணை ஆலோசகர் மானேஷ் சவுத்ரி தலைமையில், புகையிலை மேம்பாட்டு இயக்கக இயக்குநர் (பொறுப்பு) கே. மனோகரன், மத்திய நிதி அமைச்சக செலவினங்கள் துறை துணை இயக்குநர்

வி. ஸ்ரீகாந்த், மத்திய மின்துறை அமைச்சக துணைச் செயலர் சி.ஜெ. ஜோஷ், காவிரி மற்றும் தென்னக ஆறுகள் அமைப்பின் கண்காணிப்புப் பொறியாளர் ஆர். சுந்தரமூர்த்தி அடங்கிய மத்திய குழுவினர் நாகை மாவட்டத்தின் வறட்சி பாதிப்புகள் குறித்து புதன்கிழமை ஆய்வு மேற்கொண்டனர்.

பனங்குடியில் ஸ்ரீ விஸ்வநாதர் கோவிலுக்குப் பின்புறத்தில், அமைக்கப்பட்டுள்ள தீவனப்புல் வளர்ப்பு நிலத்தை மத்திய குழுவினர் ஆய்வு செய்தனர்.

இதைத்தொடர்ந்து, ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் கீழையூரில் நடைபெற்ற பண்ணைக் குட்டை அமைக்கும் பணி மற்றும் சுக்கான்கட்டி வாய்க்கால் தூர்வாரும் பணியையும் குழுவினர் பார்வையிட்டனர்.

தொடர்ந்து, கீழையூரைச் சேர்ந்த விவசாயிகள் மத்திய குழுவினரிடம் கூறியது: கீழ்வேளூர் வி. தனபாலன்: டெல்டா மாவட்டங்களில் 19.5 லட்சம் டன் நெல் உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட விளைநிலங்களுக்கு தமிழக அரசு அளித்த நிவாரணத் தொகையில் காப்பீட்டுத் தொகை சேர்க்கப்பட்டதால், முழுமையான நிவாரணம் கிடைக்கவில்லை. எனவே, காப்பீட்டுத் தொகை (ஏக்கருக்கு) ரூ. 8,400-ஐ தேசிய பேரிடர் நிவாரண நிதி மூலம் விவசாயிகளுக்கு மத்திய அரசு வழங்க வேண்டும்.

எஸ். சம்பந்தம்: குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க மத்திய அரசு நிதி ஒதுக்கீடு அளிக்க வேண்டும். காவிரி நதி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நதி நீர் பங்கீட்டுக் குழுவையும் உடனடியாக அமைக்கவும், உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி தமிழகத்துக்கான காவிரி நீர்ப் பங்கீட்டை உறுதி செய்யவும் பரிந்துரைக்க வேண்டும் என்றார்.

டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதிப்பிலிருந்து முழுமையாக மீட்டெடுக்கும் நிரந்தர திட்டங்களைப் பரிந்துரைக்க வேண்டும் என விவசாயிகள் சோமு, சோமு.இளங்கோ மற்றும் முஜிபு ஷரீக் ஆகியோர் வலியுறுத்தினர்.

இதைத்தொடர்ந்து, நீர்முளை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலம் வழங்கப்பட்ட வறட்சி நிவாரணம் குறித்து குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர்.

விரைவில் அறிக்கை தாக்கல்

சேத விவரங்கள் ஏற்கெனவே மாவட்ட நிர்வாகங்கள் மூலம் அளிக்கப்பட்டுள்ளது. நேரடி ஆய்வுடன், மாவட்ட நிர்வாகங்களின் கணக்கெடுப்புகள் ஒப்பிடப்பட்டு, பாதிப்புகள் குறித்த முழுமையான அறிக்கை விரைவில் மத்திய அரசிடம் தாக்கல் செய்யப்படும் என்றார் மத்திய குழு உறுப்பினரும், புகையிலை மேம்பாட்டு இயக்கக இயக்குநருமான கே. மனோகரன்.

தமிழக வருவாய்த் துறை முதன்மைச் செயலர் ராஜீவ் ரஞ்சன், வேளாண் துறை முதன்மைச் செயலர் சந்தீப் சக்சேனா, ஊரக வளர்ச்சித் துறை ஆணையர் எஸ். விஜயகுமார், பேரூராட்சிகளின் இயக்குநர் இரா. செல்வராஜ், மாநில கூட்டுறவு வங்கிகளின் தனி அலுவலர் சிவனருள், பொதுப் பணித் துறை முதன்மைப் பொறியாளர் டி. பைந்தமிழ்ச்செல்வன் ஆகியோர் ஆய்வில் பங்கேற்றனர்.

நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் மு. ஆசியா மரியம், ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் ஆர். சங்கர், மாவட்ட வேளாண் இணை இயக்குநர் உ. ராஜேந்திரன், கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் பிருத்விராஜ், நாகை வருவாய்க் கோட்டாட்சியர் வே. மணிகண்டன் ஆகியோர் உடனிருந்தனர்.

**கூட்டுப்பண்ணை சாகுபடியால் விளைபொருளுக்கு விவசாயிகளே விலை நிர்ணயிக்கலாம்**

விவசாயிகள் ஒருங்கிணைந்து கூட்டுப்பண்ணை சாகுபடி செய்தால் உற்பத்தி செய்யும் விளைப் பொருள்களுக்கான உரிய விலையை விவசாயிகளே நிர்ணயம் செய்துகொள்ளலாம் என்றார் மாவட்ட நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் ரவிசங்கர்.

மன்னார்குடியை அடுத்துள்ள கோட்டூர் ஒன்றியம், பெருகவாழ்ந்தான் கிராமத்தில் தஞ்சை பெரியார் மணியம்மை பல்கலையுடன் இணைந்து திருவாரூர் மாவட்ட நபார்டு வங்கி சார்பில் கூட்டுப்பண்ணை சாகுபடி மூலம் விவசாயிகள் பயன்பெறும் முறை குறித்த விளக்கக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு மாவட்ட நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் ரவிசங்கர் மேலும் பேசியது:

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் சுமார் 500 ஏக்கர் வரை மொத்த சாகுபடி செய்யும் நில உரிமையாளர்கள் இருந்தனர். ஆனால் இன்று 80 சதம் அளவில் சிறு,குறு விவசாயிகளே உள்ளனர். கூட்டுப்பண்ணை சாகுபடியினை விவசாயிகள் மேற்கொண்டால் அதிக அளவில் பயன் உண்டாகும். சாகுபடிக்கு தேவையான இடுபொருள்களை மொத்தமாக கொள்முதல் செய்வது போன்றவையே இதற்கு நல்ல உதாரணமாகும். பற்பசை முதல் சொகுசு கார் வரை உற்பத்தி செய்யும் நிறுவனத்தினரே அதன் விலையை நிர்ணயம் செய்கிறார்கள். விவசாயிகள் தங்கள்

நிலத்தில் உற்பத்தி செய்யும் விளைப் பொருள்களின் விலையை நிர்ணயம் செய்திட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதை மாற்றிட விவசாயிகள் ஒருங்கிணைந்து கூட்டுப்பண்ணை முறையில் சாகுபடி செய்தால் மொத்தப் பொருள்களையும் இடைத்தரகர்கள் இல்லாது நேரடியாக மொத்த வியாபாரிகளிடம் பொருள்களை விவசாயிகள் விற்பனை செய்ய முடியும். இதனால் விலையை நிர்ணயிக்கும் உரிமையை பெறுவதுடன் கூடுதல் லாபம் கிடைக்கும். இதற்கு விவசாயிகளிடம் ஒற்றுமையும்,விட்டுக்கொடுக்கும் தன்மையும் வேண்டும். பசுமைபுரட்சிக்கும், விவசாயிகள் நலத்திற்கும் நபார்டு வங்கி துணை நிற்கும் என்றார்.

நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு காவிரி டெல்டா பாசன பகுதி விளைப்பொருள்கள், விவசாயிகள் பாதுகாப்பு சங்க பொதுச்செயலர் எஸ். ரங்கநாதன் தலைமை வகித்தார்.

இதில் பெரியார்மணியம்மை பல்கலை.பேராசிரியர்கள் சுப்பிரமணியன், பாண்டியன், ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் ஜி.கே. அண்ணாதுரை, விவசாய ஆர்வலர்கள் எஸ். வாசுதேவன், சந்தானகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இயற்கை ரப்பருக்கான இறக்குமதி வரி உயராது:வர்த்தக அமைச்சகத்தின் கோரிக்கை நிராகரிப்பு**



புதுடில்லி:இயற்கை ரப்பர் மீதான இறக்குமதியை உயர்த்த வேண்டும் என்ற வர்த்தக அமைச்சகத்தின் கோரிக்கையை ஏற்க, மத்திய நிதி அமைச்சகம் மறுத்து விட்டது. குறைந்த விலையில், இறக்குமதியாகும் இயற்கை ரப்பரால், தங்கள் தொழில் பாதிக்கப் படுவதாக, உள்நாட்டு ரப்பர் துறையினர், மத்திய வர்த்தக அமைச்சகத்திடம் புகார் தெரிவித்துள்ளனர். **கேரளா:**இயற்கை ரப்பரை அதிகம் உற்பத்தி செய்யும், கேரள மாநிலத்தவர்கள், இறக்குமதியாகும் ரப்பருக்கான சுங்க வரியை உயர்த்த வேண்டும் என்று, கோரிக்கை விடுத்துள்ளனர். பார்லிமென்டிலும் இதுகுறித்து வலியுறுத்தப்பட்டது.இந்நிலையில், உள் நாட்டில் இயற்கை ரப்பரின்விலை மெல்ல உயர்வதற்கான அறிகுறிகள் தோன்றி உள்ளன. இதையடுத்து, இயற்கை ரப்பர் மீதான சுங்க வரி உயர்த்தப்பட மாட்டாது என, வருவாய் துறை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இயற்கை ரப்பர் மீதான சுங்க வரி உயர்த்தப் பட்டால், அது வாகனத் துறையில் எதிர் மறை விளைவை ஏற்படுத்தக்கூடும் என, மத்திய அரசு அஞ்சுகிறது. மேலும், சர்வதேச மந்தநிலையால், ஏற்கனவே நெருக்கடியில் சிக்கியுள்ள இந்திய வாகனத் துறைக்கு, இயற்கை ரப்பரின் விலை உயர்வு கடும் பாதிப்பை ஏற்படுத்தும் என, மதிப்பிடப்பட்டு உள்ளது. **இருப்பு:**இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:வழக்கமாக, ஒரு பொருளின் இருப்பு குறையும்போது, உடனடி தேவையை கருத்தில் கொண்டு, அப்பொருள் வெளிநாடுகளில் இருந்து

இறக்குமதி செய்யப்படும். இறக்குமதியை அதிகரிக்கும் நோக்கில், சுங்க வரியும் குறைக்கப்படும்.ஆனால், ரப்பர் நிலை அப்படி அல்ல. இதன் சப்ளைக்கும், தேவைக்கும் இடையே அதிக அளவில் பற்றாக்குறை உள்ளது. இந்த நிலையில், ரப்பர் இறக்குமதியை ஊக்குவிக்க வேண்டும். அதற்கு மாறாக, இயற்கை ரப்பர் மீதான இறக்குமதி வரியை உயர்த்த, ரப்பர் வாரியம் வலியுறுத்துவது வியப்பளிக்கிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.
**இரண்டாவது இடம்:**உலகில், இயற்கை ரப்பர் பயன்பாட்டில், இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. சென்ற 2012-13ம் நிதியாண்டில், இந்தியா, 2.16 லட்சம் டன் அளவிற்கு, இயற்கை ரப்பரை இறக்குமதி செய்துள்ளது. இது, முந்தைய நிதியாண்டில், 2.13 லட்சம் டன்னாக இருந்தது. இதே காலத்தில், 30,353 டன் இயற்கை ரப்பர் ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளது. மதிப்பீட்டு காலத்தில், இயற்கை ரப்பர் உற்பத்தி, 9.12 லட்சம் டன்னாகவும், தேவை, 9.72 லட்சம் டன்னாகவும் இருந்தது.
**உற்பத்தி:**கடந்த 2011-12ம் நிதியாண்டில், இயற்கை ரப்பர் உற்பத்தி மற்றும் தேவை, முறையே 9.03 லட்சம் டன் மற்றும் 9.64 லட்சம் டன் என்ற அளவில் இருந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை, உள்நாட்டில், இயற்கை ரப்பர் விலை, உச்சத்தில் இருந்தது. பின்னர் படிப்படியாக சரிவடைந்து வந்தது. எனினும், நடப்பாண்டு ஜனவரிமுதல் இயற்கை ரப்பர் விலை மெல்ல உயர்ந்து வருகிறது.இந்த சமயத்தில், இயற்கை ரப்பர் இறக்குமதி வரியை உயர்த்துவது சரியல்ல என்று, மத்திய அரசு கருதுவதாக தெரிகிறது.
அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பு வீழ்ச்சி, இறக்குமதி செலவின உயர்வு ஆகியவற்றை கருத்தில் கொண்டு, மத்திய அரசு, இத்தகைய முடிவிற்கு வந்துள்ளதாக கூறப்படுகிறது.

**தேயிலை தூளின் தரம் கண்காணிக்க ஏற்றுமதி கவுன்சில் ஊட்டியில் நடந்த கருத்தரங்கில் தகவல்**

ஊட்டி:"தென் மாநில அளவில் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படும், தேயிலை தூளின் தரத்தை கண்காணிக்க, "தேயிலை ஏற்றுமதி கவுன்சில்' அமைக்கப்படவுள்ளது' என, தெரிவிக்கப்பட்டது. தேயிலை வாரியம், "நெலிகோலு' அறக்கட்டளை சார்பில், "தேயிலை வேளாண்மை' என்ற தலைப்பிலான கருத்தரங்கம் ஊட்டியில் நேற்று நடந்தது.
இந்திய தேயிலை வாரிய தலைவர் பானு பேசுகையில், ""நீலகிரியில், சிறு தேயிலை விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலைக்கு நியாயமான சந்தை விலையை வழங்க வேண்டும், என்ற ஐகோர்ட் தீர்ப்பு அடிப்படையில், பல கட்ட ஆய்வுகள் நடத்தப்பட்டு அரசுக்கு அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது," என்றார்.

தென் மாநில தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் பேசியதாவது: கடந்தாண்டு மார்ச் நிலவரப்படி, தென் மாநில தேயிலையின் சராசரி விலை கிலோவுக்கு 70 ரூபாயாக இருந்தது. இது, இந்தாண்டு மார்ச் மாதம் 102 ரூபாயாக அதிகரித்துள்ளது. ஏற்றுமதி, இறக்குமதியாகும் தேயிலை தூளின் தரத்தை கண்காணிக்க, நாட்டின் குறிப்பிட்ட சில இடங்களில், "தேயிலை ஏற்றுமதி கவுன்சில்' விரைவில் அமைக்கப்படவுள்ளன என்றார்.

நீலகிரி கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை கூட்டமைப்பின் (இன்கோ) தனி அலுவலர் உதயச்சந்திரன் பேசியதாவது: அரசு ஊழியர்களுக்கு, 6 மாதத்திற்கு ஒரு முறை சம்பள உயர்வு வழங்கப்படும் போது, கண்டிப்பாக விவசாயிகள் வழங்கும் விளைப் பொருட்களுக்கு நியாயமான குறைந்தபட்ச விலை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசின் கடமை. தேயிலை சாகுபடியில், விலை நிர்ணயம் செய்யும் நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலம், அனைத்து விவசாய பயிர்களுக்கும் விலை நிர்ணயம் செய்வதற்கான சூழல் அமையும், என்றார்.

**வடகரையில் பாரம்பரிய வேளாண்மைப் பொருட்கள் விழிப்புணர்வு பேரணி**

தென்காசி:வடகரையில் பாரம்பரிய வேளாண்மைப் பொருட்கள் விழிப்புணர்வு பேரணி நடந்தது. தென்காசி வட்டாரம் வடகரை கிராமத்தில் பொதுமக்களிடையே பாரம்பரிய வேளாண்மைப் பொருட்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக விழப்புணர்வு பேரணி வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் தலைமையில் நடந்தது. தென்னை நாற்றுப்பண்ணையிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இப்பேரணியை வடகரை பேரூராட்சி தலைவர் ஷெரீப் கொடியசைத்து துவக்கி வைத்தார். வடகரை முஸ்லீம் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் ""காப்போம் காப்போம் பாரம்பரியம் காப்போம்" என்ற கோஷத்துடன் விழிப்புணர்வு பேரணியில் திரளாக கலந்து கொண்டனர். இப்பேரணி வடகரை கிராமத்தின் அனைத்து தெருக்களிலும் நடைபெற்றது.

கலந்து கொண்ட மாணவர்களுக்கு நெட்டை தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டது. முடிவில் வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பாரம்பரிய பொருட்களான சீயக்காய், பருத்தி, சிறுதானியம், இளநீர் ஆகியவற்றைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மை பற்றி விவரித்தார். பேரணியில் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் திரவியம், துணை வேளாண்மை அலுவலர் சண்முகசுந்தரம், உதவி பொறியாளர் அப்துல்காதர் ஆகியோர் கலந்து கொண்டனர். பேரணி ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் பிலால் முகம்மது, மாரியப்பன், சபரிராஜா, அன்சர்அலி, குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

**கரும்பு சாகுபடியில் நரப்பாக்கம் விவசாயிகள் தீவிரம்**

திருக்கழுக்குன்றம்:நரப்பாக்கத்தில், கரும்பு சாகுபடி செய்ய விவசாயிகள், ஆர்வம் காட்டி வருகின்றனர்.திருக்கழுக்குன்றம் அடுத்த நரப்பாக்கம் மற்றும் சுற்றுப் பகுதிகளில், 250 ஏக்கர் பரப்பில், கரும்பு பயிரிடப்படுகிறது. நிலத்தை புழுதியில் நன்கு உழுது, நான்கு அடி இடைவெளி விட்டு, நீர்பாசன கால்வாய் அமைத்து, தொழு உரம், ரசாயன உரம் இட்டு, கரும்பு நாற்றுக்களை நடவேண்டும். ஒரு ஏக்கருக்கு, 5,000 நாற்றுக்கள் வரை தேவைப்படும்.மானியம்குழிதட்டு முறையில் நாற்றுகள் உற்பத்தி செய்து விற்கப்படுகிறது. விதை கரும்பாக இருந்தால்,4 டன் தேவைப்படும், இவை இரண்டையும் பயன்படுத்தலாம். இதற்கு படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலை சார்பில், மானியமாக ஒரு ஏக்கருக்கு, 8,000 ரூபாய் வழங்கப்படுகிறது. ஏக்கருக்கு, 40 டன்னுக்கு மேல் லாபம் கிடைக்கும்.கடந்த காலங்களில் கரும்பு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், அதிகமாக மக‹ல் எடுக்கும் விவசாயிகளுக்கு, வேளாண்மை துறை சார்பில் மோதிரம், சைக்கிள் ஆகியவை சிறப்பு பரிசுகளாக வழங்கப்பட்டன. கரும்பு விவசாயிகளுக்கு, 15 நாட்களில் பணம் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.ஆர்வம்இதுகுறித்து, விவசாயி கோவிந்தன், 45, கூறுகையில்,""நான் இரண்டு ஏக்கர் நிலத்தில், கரும்பு சாகுபடி செய்துள்ளேன். நிலத்தை நன்கு உழுது, ஏக்கருக்கு 8 டன் தொழு உரம் இட்டு, 5 மூட்டை ரசாயன உரம் போட்டு, கரும்பு விதைகளை நட்டேன். தேவைக்கேற்ப நீர்பாசனம் செய்து, களையை அவ்வப்போது, இயந்திரம் மூலம் அகற்றினேன்.வளர்ந்துவரும் பருவத்தில், மீண்டும் உரம் இட்டேன். 10 மாதத்தில் அறுவடைக்கு தயாரானது. கடந்த முறை ஏக்கருக்கு, 50 டன் கிடைத்தது. 45 ஆயிரம் ரூபாய் செலவு செய்தேன். லாபம் மட்டும், 50 ஆயிரம் ரூபாய் கிடைத்தது. இதனால், நரப்பாக்கம் கிணறு வைத்திருக்கும் விவசாயிகள், கரும்பு சாகுபடி செய்வதில் தீவிரமாக இறங்கியுள்ளனர்," என்றார்.

**பாதூர் உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு ஆலோசனை**

உளுந்தூர்பேட்டை:பாதூரில் நடந்த உழவர் பெருவிழாவில் ஒரு ஏக்கரில் 100 டன் கரும்பு மகசூல் பெறும் தொழில்நுட்ப முறைகள் குறித்து விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரிகள் விளக்கினர்.திருநாவலூர் ஒன்றியம் பாதூரில் வேளாண் உழவர் பெருவிழா நடந்தது. விழாவிற்கு வேளாண் உதவி இயக்குனர் தேவநாதன் தலைமை தாங்கினார். வேளாண் இணை இயக்குனர் சேகர், வேளாண் தொழில்நுட்ப முறைகள் குறித்தும், குறைந்த செலவில் அதிக லாபம் ஈட்டுவது, அரசு அளிக்கும் மானிய திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு கருத்துக்களை விளக்கி, மானியத்துடன் கூடிய இடு பொருட்களை வழங்கினார். ஒரு ஏக்கரில் 100 டன் கரும்பு மகசூல் பெறும் தொழில் நுட்பங்கள், விவசாய உற்பத்தியை மூன்று மடங்காகவும், வருவாயை இரு மடங்காகவும்

அதிகரிப்பதற்கான முறைகள் குறித்து வேளாண் அதிகாரிகள் விளக்கினர். விழாவில் பாதூர் ஒன்றிய கவுன்சிலர் மணிகண்டன், ஊராட்சி தலைவர் ஜெகதீஸ்வரி, வேளாண் அலுவலர் அர்வின்ராஜ், துணை வேளாண் அலுவலர் நெடுஞ்செழியன், உதவி வேளாண் அலுவலர்கள் சிவக்குமார், ராஜ்குமார், பழனிவேல், ஜோதிராமலிங்கம், குணசேகரன், ஆத்மா திட்ட அலுவலர்கள் கவிதா, சிவபெருமாள், நாராயணன் பங்கேற்றனர்.

**தமிழகம், கேரளாவில் முட்டை விலை 270 காசாக நிர்ணயம்**

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 270 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை, மீண்டும் ஏற்றம் காணத் துவங்கியிருப்பது, கோழிப்பண்ணையாளர்களை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது.

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 265 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஐந்து காசு ஏற்றம் கண்டு, 270 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முட்டை விலை, தொடர் சரிவுக்கு பின், மீண்டும் ஏற்றம் காணத் துவங்கியிருப்பது, கோழிப்பண்ணையாளர் மத்தியில், மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 265, பெங்களூரு, 260, மைசூரு, 262, ஹைதராபாத், 217, மும்பை, 254, விஜயவாடா, 223, கோல்கத்தா, 300, பர்வாலா, 224, டில்லி, 240. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 55 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, கிலோ, 67 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**உழவர் பெருவிழா**

ராசிபுரம்: வெண்ணந்தூர் அருகே பொன்பரப்பிபட்டி கிராமத்தில், உழவர் பெருவிழா நடந்தது. வேளாண் உதவி இயக்குநர் சீனிவாசன் தலைமை வகித்தார். பஞ்சாயத்து தலைவர் கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தார். துணை வேளாண் அலுவலர் பசுபதி, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் தமிழ்ச்செல்வி, வேளாண் பொறியியல் துறை உதவி பொறியாளர் சங்கர்குமார் ஆகியோர், அரசு திட்டம், மண் மாதிரி, விதை நேர்த்தி உள்ளிட்டவை

குறித்து விளக்கிக் கூறினர். உதவி வேளாண் அலுவலர்கள் அந்தோணிசாமி, கருப்புசாமி, ஆரோக்கியசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

**விவசாயம் செழிக்க வேள்வி பூஜை**

தா.பேட்டை: தா.பேட்டை அடுத்த பிள்ளாதுறை மாரியம்மன் கோவிலில் அம்மனுக்கு பூச்சொரிதல் விழா மற்றும் மழை பெய்து விவசாயம் செழிக்க வேண்டி யாக வேள்வி பூஜை நடந்தது.விழா முன்னிட்டு முன்னதா கிராம விநாயகர், செல்லாண்டி அம்மன், சந்திக்கருப்பு, கருப்பண்ணசாமி, அரசு வேம்பு உள்ளிட்ட பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டன.தொடர்ந்து நன்கு மழை பெய்து விவசாயம் செழிக்க வேண்டி யாக வேள்வி, கோ பூஜைகள் நடத்தப்பட்டன. பின்னர் அம்மன் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். தொடர்ந்து பூச்சொரிதல் விழா நடந்தது. விழா முன்னிட்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

**தேனி மாவட்டத்தை புறக்கணித்த மத்திய குழு வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கண்ணீர்**

தேனி: தேனி மாவட்டத்தில், வறட்சி பாதிப்பு குறித்து ஆய்வு நடத்த வராமல் மத்திய நிபுணர் குழுவும் புறக்கணித்துள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகள் நிவாரணம் கிடைக்குமா என்ற ஏக்கத்தில் கண்ணீர் வடிக்கின்றனர். மாவட்டத்தின் மொத்த சாகுபடி பரப்பு 2 லட்சத்து 92 ஆயிரம் ஏக்கர். இதில் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ஏக்கரில் தோட்டக்கலை பயிர்களும், ஒரு லட்சத்து 67 ஆயிரம் ஏக்கரில் விவசாய பயிர்களும் சாகுபடியாகிறது. மாவட்டத்தின் சராசரி மழையவு 850 மி.மீ. கடந்த 2011ல் சராசரியாக 550 மி.மீ., 2012ல் 350 மி.மீ., மட்டுமே மழை பதிவாகி உள்ளது. மழை குறைவால் அனைத்து ஆறு, குளம், கண்மாய்கள் வறண்டு விட்டன. கடந்த இரண்டு ஆண்டுகளாக நெல் நடவு செய்த விவசாயிகள் பெரும் இழப்பிற்கு ஆளாகி உள்ளனர். பாதிப்பு: கரும்பு, வாழை தலா மூவாயிரம் ஏக்கர், தக்காளி 2000 ஏக்கர், பருத்தி 600 ஏக்கர், சிறுதானியங்கள் 25 ஆயிரம் ஏக்கர், தென்னை 600 ஏக்கர், நெல் 60 ஆயிரம் ஏக்கரில் பாதிப்பு ஏற்பட்டது. சில்வார்பட்டி, ஜெயமங்கலம் பகுதியில் வெற்றிலை கொடிக்கால்கள்,தென்னந்தோப்புகள்,கரும்பு பயிர்கள் காய்ந்து போயின. ஆண்டிபட்டி பகுதியில் மாந்தோப்பு முழுமையாக காய்ந்து போனது. விவசாயிகள் வறுமையில் வாடி கடனில் சிக்கினர். தோட்டக்கலைத்துறையும், விவசாயத்துறையும் பாதிப்பு குறித்து கணக்கெடுத்தன. வருவாய்த்துறை முழுமையாக ஒத்துழைக்கவில்லை. வருவாய்த்துறை கவனம் முழுவதும் அமைச்சர் பன்னீர்செல்வம் பங்கேற்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் முகாமை சிறப்பாக நடத்துவதிலேயே இருந்தது. இதனால் வறட்சி பாதிப்பு குறித்து, தமிழக அரசுக்கு அறிக்கை அனுப்பாமல் விட்டனர். இதனால் தமிழக அமைச்சர்கள் குழு, தேனி மாவட்டத்திற்கு வரவில்லை. விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டங்களை புறக்கணித்தும், போராட்டம் நடத்தியும், அமைச்சரை பார்த்து மனு கொடுத்த பிறகே வருவாய்த்துறை சுதாரித்தது.

மாவட்டம் முழுவதும் கணக்கெடுப்பு நடத்தாமல், விவசாய, தோட்டக்கலைத்துறை அதிகாரிகளிடம் பேசி, அவர்கள் கொடுத்த அறிக்கை அடிப்படையில், 500 ஏக்கருக்கும் குறைவான பரப்பில் மட்டுமே பாதிப்பு என அறிக்கை கொடுத்துள்ளது. தோட்டக்கலைத்துறையில் பாதிப்பு 100 ஏக்கருக்கும் குறைவாம். இதனை தொடர்ந்து தமிழக அமைச்சர்கள் குழு, தேனி மாவட்டத்திற்கு வந்து ஒரு மணி நேரத்தில் ஐந்து இடங்களை மட்டுமே பார்வையிட்டது. வருவாய்த்துறை, தோட்டக்கலைத்துறை, விவசாயத்துறைகளின் மெத்தனமே அரசின் கவனத்திற்கு வறட்சி நிலவரம் சென்று சேராததற்கு முக்கிய காரணம். அதிகாரிகளிடம் கேட்டால், "சாகுபடி செய்யப்பட்ட நிலங்களில் ஐம்பது சதவீதத்திற்கு மேல் விளைச்சல் பாதிப்பு இருந்தால் மட்டுமே கணக்கெடுப்போம். தேனி மாவட்ட விவசாயிகள் வறட்சியால் சாகுபடியை நிறுத்தி விட்டனர். இதனால் பாதிப்பில்லை' என காரணம் கூறியுள்ளனர். மா, தென்னை, தக்காளி, வாழை, வெற்றிலை, கரும்பு, நெல், தோட்டக்கலை பயிர்கள் பாதிக்கப்பட்டது பற்றி, யாரும் வாய் திறக்கவில்லை. இதனால் தமிழக அரசும், மத்திய நிபுணர் குழுவும் தேனி மாவட்டத்தில் வறட்சியால் பாதிப்பில்லை, என்ற முடிவுக்கு வந்து விட்டனர். அவர்கள் கணக்குப்படி பாதிப்பு இல்லாததால் பார்க்கவும் வரவில்லை. பெண் விவசாயி தற்கொலை:மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்வது தொடர்கிறது. கடந்த வாரம் கூட, வருஷநாடு அருகே அருகுவெளியை சேர்ந்த இளங்கோவன் மனைவி அபினயா, 22, விவசாயத்தில் ஏற்பட்ட நஷ்டத்தால் தற்கொலை செய்து கொண்டார். பல விவசாயிகள், நிலங்களில் சாகுபடி செய்ய முடியாத நிலையில், பிழைப்பிற்காக ஓட்டல்களிலும், கட்டட பணிகளிலும் தொழிலாளிகளாக ஈடுபட்டுள்ளனர்.விவசாய இணை இயக்குனர் சுந்தரம்: "வறட்சி பாதிப்பு குறித்த விவரங்களை நாங்கள் வெளியிட முடியாது. மத்திய குழு தமிழகத்தில் 10 மாவட்டங்களுக்கு மட்டுமே சென்று பாதிப்பை ஆய்வு செய்துள்ளது. எனவே தேனி மாவட்டத்திற்கு வரவில்லை' என்றார்.விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் கண்ணன்: வறட்சி நிலவரம் குறித்து அதிகாரிகள் முறையாக கணக்கெடுக்கவில்லை. 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து வருவாய்த்துறை, விவசாய, தோட்டக்கலைத்துறைகளிடம் மனு கொடுத்துள்ளனர். இந்த மனுக்கள் மீது முதல் கட்ட விசாரணை நடத்தக் கூட அதிகாரிகள் முன்வரவில்லை. அதிகாரிகள் முறையாக விசாரணை நடத்தி, விவசாயிகளுக்கு நிவாரணம் பெற்றுத்தராவிட்டால், தேனியில் விவசாயிகளை திரட்டி பெரிய அளவில் போராட்டம் நடத்துவோம் என்றார்.போதுமணி, மாரியம்மன்கோயில்பட்டி: எங்கள் நிலத்தில் பயறு, எள்ளு, கானம் விதைத்தோம். எதுவும் கை வந்து சேரவில்லை. கையில் இருந்த பணத்தை இழந்து, நஷ்டத்தால் தற்போது கடன் பட்டு தவிக்கிறோம். அதிகாரிகள் யாரும் எங்கள் பாதிப்பு குறித்து விசாரிக்கவில்லை. தற்போது சொந்த நிலத்தில் விவசாயம் செய்ய

முடியாததால், கூலி வேலை செய்து வருகிறோம்.எம்.ராஜாங்கம், அய்யனார்புரம், ஆண்டிபட்டி: மூன்று தலை முறைகளாக விவசாயம் செய்து வருகிறோம். 40 ஆண்டுக்கு முன்பு ஏற்பட்ட வறட்சி தற்போது நிலவுகிறது. மழையை நம்பி சோளம், கம்பு, மக்காசோளம், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் விதைப்பு செய்தனர். உழவு,விதை,விதைப்பு செலவு என ஏக்கருக்கு 4000 ரூபாய் வரை செலவானது.பயிர்கள் முளைத்து வளர்ந்த நிலையில் கடும் வறட்சி ஏற்பட்டு 10 ஆயிரம் ஏக்கரில் பயிர்கள் கருகின. இதனால் ரூ.4 கோடி ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டது. மூக்கன், முத்தூத்து: இந்தாண்டு போதிய மழை இல்லாததால் கிணறு, போர்வெல்லில் நீர் வரத்து குறைந்து விட்டது. கடும் வறட்சியில் விவசாய பயிர்கள் கருகி விட்டன. விவசாயத்திற்கு வாங்கிய கடனை அடக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. 2000 ஏக்கரில் பயிர்கள் கருகின. இதனால் ரூ.6 கோடி வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. வறட்சியால் கொட்டை முந்திரி விளைச்சல் முழுமையாக பாதிக்கப்பட்டு விவசாயிகள் அதிக நஷ்டம் அடைந்துள்ளனர்.தங்கப்பாண்டியன், தேவாரம்:- பருவ மழை பொய்த்ததால், தேவாரம், கோம்பை, பண்ணைபுரம், தம்மிநாயக்கன்பட்டி, புதுக்கோட்டை பகுதிகளில், 4000 ஏக்கரில் சாகுபடி செய்ய நிலக்கடலை கருகி நாசமானது. 500 ஏக்கரில் தென்னை மரங்கள் கருகின. இதனால் ரூ.3 கோடி வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. நெல் விவசாயம் 200 ஏக்கருக்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளது. எம்.ரவிச்சந்திரன்,போடி: போடி பகுதியில் பல மாதங்களாக மழை பெய்யாமல் உள்ளதால், நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வறண்ட பூமியாக மாறியுள்ளது. மழையை நம்பி நெல் நடவு செய்த விவசாயிகளுக்கு, மழை இல்லாததால் நெல் விளைச்சல் குறைந்துள்ளது. நெல் விவசாயத்தை பொறுத்தவரை 200 ஏக்கருக்கு மேல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சீ.வீருபாப்பு,கூடலூர்: எப்போதும் பருவ மழை தவறாது பெய்து, விவசாயம் செழித்து வந்த கூடலூர் பகுதியில், இயற்கை ஒத்துழைப்பு அளிக்காததால், விவசாயம் கேள்விக்குறியாகி உள்ளது. கூடலூர் ஒட்டான்குளம் பாசனத்தில் 500 ஏக்கரில் விவசாயம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எஸ்.முத்துக்காமாட்சி, சில்வார்பட்டி: விவசாயக்கிணறுகள் வறண்டு விட்டன. இதனால் 100 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கரும்பு காய்ந்து வருகின்றன.இதனால்,எனக்கு மட்டும் 2 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. என்போன்று 100க்கும் மேற்பட்ட கரும்பு விவசாயிகள்,சில்வார்பட்டி, ஜெயமங்கலம், அ.வாடிப்பட்டி, குள்ளப்புரம் பகுதிகளில் பாதிக்கப்பட்டுள்ளனர். 300 ஏக்கரில் தென்னை மரங்கள் பட்டு போயுள்ளன.

**உழவர்பெருவிழா**

ஆர்.எஸ்.மங்கலம்:ஆர்.எஸ்.மங்கலம் அருகே உள்ள ஏ.மணக்குடி கிராமத்தில் உழவர் பெருவிழா மற்றும் பாரம்பரிய பொருள்களின் விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது. ஒன்றிய தலைவர் ஆனந்த் துவக்கி வைத்தார். மண்மாதிரி எடுத்தல், விதைநேர்த்தி, வறட்சியை சமாளித்து அதிக பயிர் மகசூல் பெறுவது குறித்து வேளாண் உதவி இயக்குநர் கமாலுதீன் விளக்கினார். வேளாண் துணை இயக்குனர் மணிமாறன், உதவி அலுவலர்கள் நாகேஸ்வரி, ராதாகிருஷ்ணன், காசிநாததுரை பங்கேற்றனர்.

**"கிரிராஜா' வளர்ப்பில் தீவிரம் காட்டும் பண்ணைகள் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் விற்பனை**

காரைக்குடி:விவசாயம் பொய்த்துள்ள நிலையில், "கிரிராஜா' கோழி இன உற்பத்தியில், கால்நடை பண்ணைகள் தீவிரம் காட்டி வருகின்றன."சிறு, குறு விவசாயிகள், பொருளாதாரத்தை அடையும் பொருட்டு "கிரிராஜா" வளர்ப்பை ஊக்கப்படுத்த,கால்நடை பண்ணைகளில்,அதன் குஞ்சு வளர்ப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.மத்திய அரசின் கோழியின அபிவிருத்தி திட்டத்தின் கீழ், ஒருவாரம் ஆன குஞ்சுகள் ரூ.15,இரண்டு வார குஞ்சுகள் ரூ.18,மூன்று வார குஞ்சுகள் ரூ.20,நான்கு வார குஞ்சுகள் ரூ.25 என்ற அளவில் விற்கப்படுகிறது.செட்டிநாடு கால்நடை பண்ணை துணை இயக்குனர் ராஜசேகரன் கூறும்போது:"கிரிராஜா' என்ற வார்த்தை காட்டுப்பறவைகளின் ராஜா என்பதினை குறிக்கும். கவர்ந்து இழுக்கும் தோகை அமைப்பும், கொண்டை அமைப்பும் நாட்டுக்கோழிகளை ஒத்திருக்கும். இவை அடைகாக்கும் தன்மை அற்றவை. இதனால், குஞ்சு பொரிக்கும் தன்மையுடைய முட்டைகளை பெற்று, நாட்டு கோழியினங்களை கொண்டு அடை காக்கலாம். தற்போது வளர்க்கப்படும் நாட்டுக்கோழி இனங்களை காட்டிலும், மூன்று மடங்கு உடல் எடையும், முட்டை உற்பத்தியும் செய்யும் திறன் கொண்டது. நோய் எதிர்ப்பு தன்மை மிகுந்தவை.ஒரு ஜோடி கிரிராஜா கோழிகளை வளர்ப்பதன் மூலம்,ஓராண்டிற்கு ரூ.ஆயிரம் வருமானம் கிடைக்கும்.ஒரு பெட்டைக்கோழி ஆண்டுக்கு குறைந்த பட்சம் 100 முட்டைகள் இடும். ஒரு ஜோடிக்கு மேல் வளர்ப்பவர்களுக்கு இதன் அடிப்படையில்,ஏராளமான வருமானம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டை அடிப்படையாக கொண்டு,குறைந்த பட்ச விலையில்,இங்கு விற்கப்படுகிறது.மேலும், அவற்றை வளர்ப்பதற்குரிய ஆலோசனைகளும் கால்நடை மருத்துவர்களால் வழங்கப்படுகிறது, என்றார்.

**கடும் வறட்சியால் தீவனமின்றி 19 லட்சம் கால்நடைகள் தவிப்பு**

சிவகங்கை:கடும் வறட்சி காரணமாக, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள, 19 லட்சம் கால்நடைகள் தீவனமின்றி தவிக்கின்றன. கால்நடை வளர்ப்போரும், வருவாய் தரும் ஜீவன்களுக்கு, ஜீவனம் வழங்கமுடியாமல் தவிக்கின்றனர். மாவட்டத்தில், விவசாயத்திற்கு அடுத்தபடியாக, கால்நடை வளர்ப்பில் விவசாயிகள் அதிகளவில் ஆர்வம் செலுத்துகின்றனர். வயல்களில் விளையும் நெற்பயிரில் கிடைக்கும் "வைக்கோலை' தீவனமாக வழங்கி, மாடுகளை வளர்க்கின்றனர். இது தவிர, ஆடுகளை மேய்ச்சலுக்கு அழைத்து செல்வதன் மூலம், ஆண்டுதோறும் ஆடு வளர்ப்போர் வருமானம் பெற்று வருகின்றனர். அந்த வகையில், மாவட்டத்தில், 30 ஆயிரம் கறவை மாடுகள் உள்ளன. இவை உட்பட 2 லட்சத்து 30 ஆயிரத்து 809 பசு, எருமை மாடுகள் வளர்க்கப்படுகின்றன. வெள்ளாடு, செம்மறி ஆடுகள் 16 லட்சம் வரை உள்ளன. தீவன தட்டுப்பாடு: தற்போது, கடும் வறட்சி காரணமாக நெல் விளைச்சல் இன்றி, சாவியாகி போனது. மழையின்றி, திறந்த வெளி நிலங்களில் புல், செடிகள் வளர்ச்சியில்லாமல், நிலம் வறண்டுவிட்டன. இதனால், மேய்ச்சலுக்கு அழைத்து செல்லும் ஆடு, மாடுகள் உரிய தீவனமின்றி, தவிக்கின்றன. இதனால், பெரும்பாலான மாடுகளை, இறைச்சிக்காக (அடிமாடுகளாக) கேரளாவிற்கு கடத்தி செல்கின்றனர்.விவசாயத்திற்கு அடுத்த படியாக கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகள், கால்நடைகளுக்கு உரிய தீவனமின்றி தவித்து வருகின்றனர். இதன் காரணமாக, பால் உற்பத்தியும் 50 சதவீதம் வரை குறைந்து, பால் மூலம் கிடைக்கும் தினசரி வருமானம் பாதித்துள்ளதாக, விவசாயிகள் தெரிவிக்கின்றனர். கால்நடைத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,""கறவை மாடுகளை காப்பாற்ற, சாவியான "நெற்கதிர்களை' சேமித்து வைத்து, உணவாக வழங்குகின்றனர். இது தவிர, கிணற்று பாசனம் மூலம், விவசாயம் நடக்கும் வயல்களில் கால்நடைகளுக்கு "பசும்புற்களை' சேகரித்து கொள்கின்றனர். வரும் காலங்களில், கால்நடைகளுக்கு தீவன தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க, ஆயிரம் ஏக்கரில், பசுந்தீவன புல் வளர்க்க, 50 சதவீத மானியம் வழங்கி வருகிறோம். இதன் மூலம், கால்நடை வளர்ப்போர் பயன்பெறலாம், என்றார்.

**கோடை மழையை எதிர்பார்க்கும் விவசாயிகள்**

திருப்புத்தூர்:திருப்புத்தூர் வட்டாரத்தில் கோடை மழையும் பொய்த்து வருவதால், கால்நடைகளுக்கு குடிநீர் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது.திருப்புத்தூரில் பருவமழை பொய்த்ததால், இந்த ஆண்டு, சராசரிக்கும் குறைவாகவே மழை பெய்தது. விவசாயம் பொய்த்தது. கடந்த சில

நாட்களாக, கோடை மழையாக பரவலாக பல இடங்களில் மழை பெய்தது. திருப்புத்தூரில் கடந்த சில நாட்களாக, வானம் கருத்து, மேகங்கள் சூழ்ந்தாலும், மழை பெய்யவில்லை. நேற்று முன் தினம், சில நிமிடங்கள், சிறு தூறல்களுடன் மழை பொய்த்து விட்டது. திருப்புத்தூர் ஒன்றியப் பகுதியில்,குளங்கள்,கண்மாய்கள் போன்ற முற்றிலும் வறண்டு விட்டன.பொதுமக்கள் போர்வெல்,உள்ளாட்சி குழாய் இணைப்புகள் மூலம், குடிநீர்ப் பிரச்னையை சமாளித்து வருகின்றனர். கிராமங்களில் மேய்ச்சலுக்கு வெளியே செல்லும் கால்நடைகள் வெயிலில் காய்வதுடன், குடிக்க நீரின்றி,பரிதாபமாக தவிக்கின்றன. இதனால் கிராமத்தினர் கோடை மழையை பெரிதும் எதிர்பார்க்கின்றனர்.

**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**

சிவகிரி:சிவகிரியில் நாளை (11ம்தேதி) கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது.ராணிநாச்சியார் திருமண மண்டபத்தில் நாளை காலை 10.30 மணிக்கு நடைபெறும் முகாமிற்கு தென்காசி ஆர்டிஒ ரமேஷ் தலைமை வகிக்கிறார். குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தென்காசி கோட்டத்தில் உள்ள தென்காசி, செங்கோட்டை, சிவகிரி, வீ.கே.புதூர் மற்றும் ஆலங்குளம் வட்டத்தை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு தென்காசி ஆர்டிஒ ரமேஷ் கேட்டுக் கொண்டுள்ளார்.

**உழவர் பெருவிழா**

தூத்துக்குடி: விளாத்திகுளம் பெரியசாமிபுரத்தில் உழவர் பெருவிழா நடந்தது. பஞ்.,தலைவர் செல்வராணி தலைமை வகித்தார். விழாவில் விளாத்திகுளம் வே ளாண்மை அலுவலர், தோட்டகலை அலு வலர்கள், மீனவ கடல் வாழ் அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாய சம்பந்தமாக விளக்கம் அளித்தார். மீன்வளம் மற்றும் மீனவர்களுக்கு சலுகை மற்றும் தொழில் பற்றி விளக்கி கூறினார். கூட்டத்திற்கு பொது மக்கள், மகளிர்குழு உறுப்பினர்கள், விவ சாய குடிமக்கள், மீனவ தொழிலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். பாண் டியன் நன்றி கூறினார்.

**கோவில்பட்டியில் வறட்சி பாதிப்பு குறித்து மத்தியக் குழுவினர் ஆய்வு**

கோவில்பட்டி: கோவில்பட்டி பகுதியில் வறட்சி பாதிப்பு குறித்து மத்தியக் குழுவினர் ஆய்வு நடத்த வந்தனர். ஆனால் வறட்சி பாதிப்பை ஆய்வு செய்யவதை காட்டிலும் மத்திய அரசின் திட்ட செயல்பாடுகளையே அதிகம் பார்வையிட்டதாக விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர். தேமிழக வறட்சி நிலையை நேரில் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்யுமாறு இரண்டு மத்திய உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டது. தூத்துக்குடி மாவட்டத்தில் வறட்சி பாதிப்பை பார்வையிட்டு

ஆய்வு செய்ய மத்திய உயர்மட்டக் குழுவினர் நேற்றுமுன்தினம் (மே.8) வந்திருந்தனர். மேலஈராலில் விவசாயிகளை சந்தித்து வறட்சி நிலை குறித்து பேசினர். அப்போது மதிமுக விவசாய அணி மாநில துணை செயலாளர் வரதராஜன், விவசாய சங்க பிரதிநிதிகள் நல்லையா, கணபதிராமன், கிருஷ்ணமூர்த்தி, சித்தவன், ரெங்கசாமி உள்பட சுமார் 300 பேர் உயர்மட்டக் குழுவினரிடம் தங்களது விவசாயத்தில் ஏற்பட்டுள்ள நஷ்டங்கள், கஷ்டங்கள் குறித்து பேசினர். இதில் விவசாயிகளின் கருத்துக்களை மாவட்ட கலெக்டர் ஆஷிஷ்குமார் மத்திய உயர்மட்டக் குழுவினருக்கு விளக்கினார். மேலும் விவசாயம், ஆடு மாடுகள் வளர்ப்பு, அவற்றிக்ஙின தீவணம், குடிநீர் வசதி ஆகியன குறித்தும் குழுவினர் கேட்டறிந்தனர். இதையடுத்து பொதுமக்கள் வசதிகள் குறித்து கிராமத்தில் மத்தியக்குழுவினர் பார்வையிட்டனர். இதுகுறித்து மத்திய அரசுக்கு தெரிவித்து நல்லதொரு நடவடிக்கை எடுக்கப்படுமென அதிகாரிகள் குழுவினர் தெரிவித்தனர். தொடர்ந்து எட்டயபுரம் வழியாக கோவில்பட்டி ஆர்டிஓ ஆபிசிற்கு மத்தியக்குழுவினர் வந்தனர். இதையடுத்து சுமார் 7 நிமிடங்கள் தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் ஆஷிஷ்குமார், கோ வில்பட்டி ஆர்டிஓ கதிரேசன், தாசில்தார் ரமேஷ், மண்டல துணை தாசில்தார் ராஜ்குமார் உள்ளிட்ட அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தி விட்டு விருதுநகர் மாவட்ட கலெக்டர் ஹரிஹரனுடன் விருதுநகர் மாவட்டத்தை பார்வையிட சென்றனர். இந்நிலையில் அதிகாரிகளின் ஆய்வுப்பணி குறித்து பத்திரிக்கையாளர்கள் செய்தி சேகரிக்க சென்ற நிலையில் அனுமதி மறுக் கப்பட்டது. இதையடுத்து தூத் துக்குடி மாவட்ட கலெக்டர் ஆஷிஷ்குமார் கோவில்பட்டி கதிரேசன் கோயில் மலையில் நடைபெறும் ரோடு போடும் பணிகள் மற்றும் கோவில்பட்டி எட்டயபுரம் ரோட்டில் நடைபெறும் பணிகள் குறித்து பார்வையிட்டு திரும்பினார். இந்நிலையில் தூத்துக்குடி மாவட்டம் முழுவதுமுள்ள வறட்சி பணிகளை வெறும் நான்கு இடங்களை மட்டும் பார்வையிட்டு அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்தால் விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் உண்மையான கஷ்ட நஷ்டங்கள் அரசுக்கு தெரியுமா என்று பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். மேலும் வறட்சி பாதித்த இடங்களை நேரில் ஆய்வு செய்ய வரும் அமைச்சர்களோ, அதிகாரிக ளோ கோவில்பட்டி தாலுகாவில் ஒரு இடங்களைக்கூட பார் வையிடாமல் சென்றது அப்பகுதி விவசாயிகளை அதிருப்தியில் ஆழ்த்தியுள்ளது. கோவில்பட்டி தாலுகாவில் கடந்த விவசாய பருவத்தின் போது மருந்திற்கும் மழை பெய்யாமல் ஏமாற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது. அதேநேரத்தில் அதிகாரிகள் ஏற்கனவே திட்டமிட்டபடி ஹைவேயில் உள்ள கிராமங்களில் மட்டும் ஆய்வுப்பணியை நடத்தி விட்டு திரும்பிச் சென்றனர். இதனால் குடிக்க தண்ணீர் கூட இல்லாமல் கடும் வறட்சியில் அல்லாடும் கோவில்பட்டி தாலுகாவின் நிலை அரசுக்கு தெரியவோ, வளர்ச்சித்திட்டங்கள் கிடைக்கவோ வாய்ப்புகள் மிகவும் குறைவு என்று சமூகஆர்வலர்கள் கூறுகின்றனர். மேலும் மாவட்டத்தின் வறட்சி நிலையை ஆய்வு செய்ய வந்த அதிகாரிகள் மத்திய அரசின் திட்டங்கள் செயல்படுத்தப் படுவதை பார்வையிடுவதிலேயே அதிக அக்கறை காட்டியதாகவும் கூறுகின்றனர். ஏனெனில் சத்துணவு கூடம், நூறுநாள் வேலை திட்டப் பணிகள், குளம் தூர்வாறுதல் உள்ளிட்ட பணிகளை அதிக ஆர்வத்துடன் ஆய்வு செய்ததாக விவசாயிகள்

கூறுகின்றனர். மொத்தத்தில் மத்திய அரசின் உயர்மட்டக்குழு கோவில்பட்டி தாலுகாவை புறக் கணித்துள்ளதால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர்.

**சேத்துப்பட்டு அருகே விவசாயிகளுக்கு மானியத்தில் கருவிகள்**

சேத்துப்பட்டு ஒன்றியம் ஊத்தூர் ஓதலவாடி கிராமத்தில் நடந்த உழ வர் பெருவிழாவில் விவ சாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் கருவிகள் வழங்கப் பட்டது.

**மானியத்தில் கருவிகள்**

சேத்துப்பட்டு ஒன்றியம் ஊத்தூர் ஓதலவாடி கிராமத் தில் சேத்துப்பட்டு வேளாண் மைத்துறை சார்பில் உழவர் பெருவிழா நடைபெற்றது. சேத்துப்பட்டு வேளாண்மை உதவி இயக்குனர் வடமலை தலைமை தாங்கினார். உதவி வேளாண்மை அலுவலர் பாபு முன்னிலை வகித்தார்.

விழாவில் சேத்துப்பட்டு ஒன்றியக்குழு தலைவர் பத்மாவதி சின்னக்குழந்தை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 15 விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் விவ சாய கருவிகள், திருந்திய நெல், உழுந்து வழங்கி பேசினார்.

**சொட்டுநீர் பாசனம்**

அப்போது முதல்அமைச் சர் ஜெயலலிதா விவசாயத் தில் புரட்சியை ஏற்படுத்து வதற்காக வேளாண்மைத் துறைக்கு சலுகைகளை வழங்கி வருகிறார். விவசாயி கள் இதை பயன்படுத்தி நல்ல விளைச் சலைபெற வேண்டும் என்று கூறினார்.

ஒன்றிய கவுன்சிலர் அன்பு தாஸ், அ.தி.மு.க. கிளை செயலாளர் பச்சையப்பன், வேளாண்மை அலுவலர் அகிலாதேவி, பட்டுவளர்ச் சித்துறை அலுவலர் சந்திர மவுளி மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

முகாமில் 48 விவசாயிக ளுக்கு மண்பரிசோதனை செய்யப்பட்டது. உழவர் ஒருங்கிணைந்த அட்டையும் வழங்கப்பட்டது. கலைநிகழ்ச் சியும் நடைபெற்றது.

**வடகாட்டில் விவசாயிகளுக்கு, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு கையேடுகள் உழவர் பெருவிழாவில் வழங்கப்பட்டன**

வடகாட்டில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு ஒருங் கிணைந்த பயிர் பாது காப்பு கையேடுகளை அதிகாரி வழங்கினார்.

உழவர் பெருவிழா

வடகாடு முத்துமாரியம்மன் கோவிலில் உழவர் பெருவிழா நடைபெற்றது. விழாவுக்கு வேளாண் உதவி இயக்குநர் சிவக்குமார் தலைமை தாங்கி னார். ஊராட்சி மன்றத் தலைவர் கனகராஜ் முன்னிலை வகித்த £ர். விழாவில் வேளாண் துணை இயக்குநரும், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவி யாருமான (வேளாண்மை) நாகேந்திரன், விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர் பாது காப்பு கையேடுகளை வழங்கி பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது;-

இலவச ஆலோசனைகள்

இயற்கை சாதகமாக இல்லாத நிலையில் விவசாயிகளை யும், விவசாயத்தையும் பாது காக்கும் வகையில் தமிழக அரசால் நாள் தோறும் புதிய, புதிய திட்டங்கள் அறிவிக் கப்படுகின்றன. திட்டங்கள் முழு அளவில் உரியவரை சென்றடையவே அதிகாரிகள், விவசாயிகளாகிய உங்களை நாடி வந்துள்ளோம். திட் டங்களை அறிந்து கொண்டு அதைப்பெற உரிய ஆவணங் களுடன் சம்பந்தப்பட்ட அலு வலகத்தை அணுக வேண் டும். பயிர் சாகுபடிக்கான அனைத்து ஆலோசனை களும் இலவசமாகவே அளிக்கப்படும்.

தற்போது கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால் அனைவரும் கதர் ஆடை அணிய வேண்டும். தின மும் இளநீர் பருக வேண்டும். இயற்கையோடு இயைந்து வாழ்ந்தால் கோடை யின் தாக்கத்தால் ஏற்படும் கொடிய நோயில் இருந்து காத்துக்கொள்ளலாம். இவ் வாறு அவர் பேசினார்.

ஊர்வலம்

முன்னதாக வடகாடு கடை வீதியில் இருந்து மாரி யம்மன் கோவில் வரை இயற்கை யோடு இணைந்து வாழக்கோரி பெண்கள் ஊர்வலமாக சென் றனர்.

நிகழ்ச்சியின்போது மண் பரிசோதனை செய்யப்பட்ட வர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. ஒன்றிய கவுன்சிலர் சீனிவாசன், முன்னாள் கவுன்சிலர் ரெத்தி னம், முன்னாள் கூட்டுறவு சங்கத் தலைவர் தங்கவேல் மற்றும் வேளாண், வேளாண் பொறியியல், தோட்டக்கலை, பொதுப் பணித்துறை உள்ளிட்ட துறைகளை சேர்ந்த அலுவலர்கள் பேசினர். ஏராளமான விவசாயிகள் கலந்து கொண் டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடு களை வேளாண் உதவி அலு வலர்கள் செய்தனர்.

தினகரன்

**வேலூர் மாவட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் மதிமுக செயல்வீரர் கூட்டத்தில் தீர்மானம்**

ஆற்காடு, : வேலூர் மாவட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என மதிமுக செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வேலூர் கிழக்கு மாவட்ட மதிமுக செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் தேர்தல் நிதி வசூலிக்கும் புத்தகம் வழங்கும் நிகழ்ச்சி ஆற்காட்டில் நேற்று நடந்தது. மாவட்ட செயலாளர் பி.என்.உதயகுமார் தலைமை தாங்கினார். மாவட்ட அவைத் தலைவர் சி.கோவிந்தசாமி, துணை செயலாளர் ஜி.கோபி, மாவட்ட பொருளாளர் துரைவேலு ஆகியோர் முன்னிலைவகித்தனர். நகரச் செயலாளர் பி.ஆனந்தன் வரவேற்றார். கூட்டத்தில் மாநில துணைப் பொது செயலாளர் மல்லை சி.சத்யா, ஆட்சிமன்ற குழு உறுப்பினர் என்.சுப்பிரமணி ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். மேலும், வேலூர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்தும் இதுவரை நிவாரண உதவி வழங்கவில்லை. மத்திய மாநில குழுக்கள் பார்வையிட்டு விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரண நிதி வழங்க வேண்டும். வேலூர் மாவட்டத்துக்கான மேட்டூர் கூட்டு குடிநீர் திட்டத்தை உடனடியாக விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர் நகர ஒன்றிய செயலாளர்களிடம் தேர்தல் நிதி வசூலிக்கும் புத்தகம் வழங்கப்பட்டது. இதில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் நீதி (எ) அருணாச்சலம், எல்.ராமதாஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் சேகர், அரிதாஸ், ஜெயகுமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**மழையின்மையால் மாம்பழங்களில் நீர்ச்சத்து குறைவு விலையின்றி விவசாயிகள் பாதிப்பு**

நத்தம், : போதிய மழையின்மையால் மா விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மாம் பழங்களில் நீர்ச்சத்து இன்றி எடை குறைந்து விலை கிடைக்காமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நத்தம் பகுதியில் காசம்பட்டி, பரளி, செந்துறை, குட்டுப்பட்டி, சிறுகுடி, சமுத்திராபட்டி, புன்னப்பட்டி உள்பட பல்வேறு பகுதிகளில் மா சாகுபடி நடந்து வருகிறது. தற்போது மா சீசன் உச்சகட்டத்தை அடைந்துள்ளது. கல்லாமை, மல்கோவா, பங்கனவல்லி, பாலாமணி, சப்பட்டை, மல்லிகா, இமாம்பஜந்த் போன்ற வகை மாம்பழங்கள் நத்தத்திலுள்ள கமிஷன் கடைகளுக்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. இந்த மாம்பழங்கள் பெரும்பாலும் சிறியதாக உள்ளன. நன்கு விளைந்த மல்கோவா மாம்பழம் ஒரு கிலோ ரூ.20 முதல் 25 வரையும், பங்கனவல்லி 20,

இமாம்பஜந்த் 35, கல்லாமை 10, பாலாமணி 12 என தரத்திற்கு தகுந்தாற் போல் விலை போகிறது. மாமரங்களில் பிஞ்சு பிடித்த போது போதிய மழையில்லை. இதனால், கடும் வறட்சி ஏற்பட்டது. இதனால் மரத்திலிருந்து பறிக்கும் பழங்களில் போதிய நீர்ச்சத்து இல்லை. நீர்ச்சத்து குறைவால் எடையும் குறைவாக இருக்கிறது. மழை குறைவால் போதிய மகசூலும் இல்லை. மாம்பழங்கள் போதிய விலை போகாததால் விவசாயிகள் இந்த ஆண்டு பெரும் நஷ்டத்தை சந்தித்துள்ளனர். மா விவசாயி கண்ணுமுகமது கூறுகையில், பருவமழை பொய்த்ததால் மாமரங்களில் சாகுபடி கணிசமாக குறைந்து விட்டது. மேலும், நீர்ச்சத்து இல்லாமல் மாம்பழங்கள் எடை குறைந்து காணப்படுகின்றன.

மகசூல் பாதிப்பால் விவசாயிகளுக்கு பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்படும். வறட்சியால் பல இடங்க ளில் மாமரங்கள் பட்டுப்போயுள்ளன, என்றார்.

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பசுந்தீவனம் உற்பத்தி செய்ய ஞூ88.40 லட்சம் நிதி ஒதுக்கீடு ஆட்சியர் தகவல்**

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பசுந்தீவனம் உற்பத்தி செய்ய ஞூ88.40 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் ராஜேஷ் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2013&2013ம் ஆண்டில் பருவமழை மற்றும் கோடை மழை பொய்த்துவிட்டது. இதனால் கால்நடைகளுக்கு தேவையான பசுந்தீவன உற்பத்தி மிகவும் குறைந்துள்ளது. அதனால் கால்நடை வளர்ப்போர்கள் வறட்சி காலத்தில் கால்நடைகளை பராமரிப்பதற்கு முடியாமல் சிரமப்படுவதை அறிந்த தமிழக முதல்வர் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு 1300 ஏக்கர் பரப்பளவில் தீவன சோளம் உற்பத்தி செய்ய வறட்சிகால நிவாரண நிதி வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார். ஒவ்வொரு பயனாளிகளுக்கும் குறைந்தபட்சம் 0.5 ஏக்கர் முதல் ஒரு ஏக்கர் பரப்பில் தீவன பயிர் செய்ய 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். நீர் ஆதாரம் மற்றும் கால்நடைகள் கொண்டுள்ள பயனாளிகள் மட்டும் தேர்வு செய்யப்படுவார்கள். பயனாளிகள் உற்பத்தி செய்யும் பசுந்தீவனத்தினை, அவர்களின் கால்நடைகளின் பயன்பாட்டிற்கு போக மீதமுள்ள தீவனத்தினை அருகில் உள்ள ஆவின் பால் கூட்டுறவு நிலையத்தில் விற்பனை செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. பயனாளிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பசுந்தீவனத்திற்கான விலையினை மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்படும். கால்நடை வளர்போர்கள் தங்களுக்கு தேவையான பசுந்தீவனத்தினை அருகில் உள்ள ஆவின் கூட்டுறவு நிலையத்தில் இருந்து 50 சதவீத மானியத்தில் பெற்றுக்கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக ஒரு ஏக்கருக்கு 50 சதவீதம் மானியமாக ஞூ6 ஆயிரத்து 800 (விதைகள் உட்பட) வழங்கப்படும். மேலும், 1300 ஏக்கர் பரபரப்பளவில் தீவன சோளம்

பசுந்தீவன உற்பத்தி செய்ய ஞீ88 லட்சத்து 40 ஆயிரம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**தண்ணீர் தட்டுப்பாட்டால் காயும் மரங்கள் முன்கூட்டியே வாழைத்தார் அறுவடை விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கவலை**

கிருஷ்ணராயபுரம், : தண்ணீர் தட்டுப்பாட்டால் மரங்கள் காய்வதால் கிருஷ்ணராயபுரம் பகுதியில் அறுவடை காலத்துக்கு முன்பே வாழைத்தார்கள் அறுக்கப்படுகின்றன. கரூர் மாவட்டத்தில் கிருஷ்ணராயபுரம், லாலாப்பேட்டை, பிள்ளாபாளையம், வல்லம், சிந்தல வாடி, மேட்டுமகா தானபுரம், கோவக்குளம், லந்தன்கோட்டை பகுதிகளில் 1,000 ஏக்கருக்கு மேல் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கட்டளை மேட்டு வாய்க்கால், புதிய கட்டளை மேட்டு வாய்க் கால் ஆகிய வாய்க்கால் தண்ணீரை நம்பி வாழை சாகுபடி நடந் தது. ஆனால் வாய்க்கால்களில் தற்போது தண்ணீர் சுத்தமாக இல் லை. வாழையை பொறுத்தவரை அதிகளவு தண்ணீர் தேவைப்படும் பயிராகும். இந்த ஆண்டு போதியளவு தண்ணீர் இல்லாததால் வாழை மரங்கள் பழுத்து விடுகிறது. மேலும் வாழைதார்கள் ஊறாமல் அடிக்கும் வெயிலுக்கு வெம்புகிறது. பல பகுதிகளில் மரங்கள் பாதியோடு ஒடிந்து விழுகிறது. இதனால் இன்னும் இரண்டு, மூன்று மாதங்கள் கழித்து வெட்டப்படும் வாழைகள் கூட அப்படியே விட்டால் தார்கள் காய்ந்துவிடும் என பயந்து விவசாயிகள் கிடைக்கின்ற விலை கிடைக்கட்டும் என தார்கள் ஊறுவதற்கு முன்பே வெட்டி மார்கெட்டிற்கு அனுப்பி விடுகின்றனர். இதனால் கடந்த சில வாரங்களாக மார்கெட்டில் வாழை தார்கள் குவிந்து வருகிறது. ஒரே சமயத்தில் தார்கள் வந்து குவிவதால் தற்போது வாழை விலை சரிந்துள்ளது. கரூர் மாவட்டம் மட்டுமின்றி பிற பகுதிகளில் இருந்தும் தினந்தோறும் ஆந்திராவுக்கு வாழைதார்கள் அனுப்பி வைக்கப்படும். இதனால் தமிழகத்தை பொறுத்தவரை வாழைக்கு ஒரளவு விலை கிடைத்து வந்தது. தற்போது ஆந்திராவில் நல்ல மழை பெய்து அங்கு வாழை உற்பத்தி அதிகரித்துள்ளது. மேலும் ஆந்திராவில் உற்பத்தி ஆகும் தார்கள் 20 சீப்புகள் கொண்டதாகவும், திரட்சியாகவும் உள்ளதால் தமிழகவாழை மார்கெட் டில் ஆந்திரா வாழைக்கு கிராக்கி நிலவுகிறது. இதனால் தமிழக வாழைகள் விலைபோகவில்லை என்கின்றனர் வியாபாரிகள்.

நேற்றைய மார்கெட் நிலவரப்படி சில்லறை விலையில் பூவன், ரஸ்தாலி, கற்பூரவள்ளி தார்கள் 30, 50 என ரூபாய் 100க்கள் தான் விலைபோகிறது. மொத்த மார்கெட் நிலவரப்படி 10 டன் கொண்ட வாழைதார் லோடு ரூ.75 ஆயிரத்திற்கு விற்க வேண் டியது வெறும் 30 ஆயிரத்திற்கு தான் விற்கிறது.

இது குறித்து வாழை வியாபாரியும், விவசாயியுமான லாலாப்பேட்டை மதியழகன் கூறியதாவது: தண்ணீர் பிரச்சனையால் வாழைதார்கள் ஊறுவதற்கு முன்பு அப்படியே விட்டால் காய்ந்து விடும் என்ற அச்சத்தில் விவசாயிகள் தார்களை வெட்டி மார்கெட்டுக்கு அனுப்புகின்றனர். ஒரே சமயத்தில் வாழைதார்கள் குவிவதால் வாழைக்கு விலை இல்லை என்றார்.

**வடகாட்டில் உழவர் பெருவிழா**

ஆலங்குடி, :ஆலங்குடி அடுத்த வடகாட்டில் உழவர் பெருவிழா நடைபெற்றது. வேளாண் உதவி இயக்குநர் சிவக்குமார் தலைமை வகித்தார். ஊராட்சித் தலைவர் கனகராஜ், ஒன்றிய கவுன்சிலர் சீனிவாசன், முன்னாள் கவுன்சிலர் ரத்தினம், முன்னாள் கூட்டுறவு சங்கத் தலைவர் தங்கவேல் முன்னிலை வகித்தனர். விழாவில் வேளாண் துணை இயக்குநரும், கலெக்டரின் நேர்முக உதவியாளருமான( வேளாண்மை) நாகேந்திரன், விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு கையேடு வழங்கி பேசினார். முன்னதாக வடகாடு கடைவீதியில் இருந்து மாரியம்மன் கோயில் வரை இயற்கையோடு இயைந்து வாழக்கோரி பெண்கள் பேரணியாகச் சென்றனர். நிகழ்ச்சியில் மண் பரிசோதனை செய்யப்பட்டவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

**இந்த ஆண்டை போல் வறட்சியை எந்த ஆண்டும் சந்தித்தது இல்லை மத்திய குழுவிடம் விவசாயிகள் குமுறல் ஆய்வு வெறும் கண்துடைப்பு**

அறந்தாங்கி பகுதியில் மத்திய குழுவினரிடம், விவசாயிகளின் குறைகள் குறித்து மனு அளித்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் செங்கோடன், பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

மத்திய குழுவின் ஆய்வு வெறும் கண்துடைப்பாக உள்ளது. இப்பகுதி விவசாயிகளுக்கு திருப்தியளிப்பதாக இல்லை. மத்திய குழுவினர் அறந்தாங்கி பகுதியில் எந்த பகுதியிலும் வாகனத்தை விட்டு இறங்கி ஆய்வு மேற்கொள்ளவில்லை. மாறாக சுற்றுப்பயணம் வந்தது போல் வந்து விட்டு சென்றுள்ளனர். குறைந்தது 2 நாளாவது தங்கி ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.வறட்சி காரணமாக புதுக்கோட்டை மாவட்டத்தில் நெல், சோளம், கரும்பு உள்ளிட்ட 4,000 ஏக்கர் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால், வறட்சி நிவாரணமாக மத்திய அரசு தமிழகத்திற்கு ரூ.60 கோடி மட்டுமே நிதி ஒதுக்கியுள்ளது. இது போதுமானதாக இல்லை. எனவே மத்திய அரசு வறட்சி நிவாரணமாக தமிழகத்திற்கு ரூ.400 கோடி நிதி ஒதுக்கவேண்டும். இவ்வாறு செங்கோடன் கூறினார்.

**ஆலங்குடியில் கரும்பில் மகசூல் பெறுவது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி**

ஆலங்குடி, : ஆலங்குடியில் ஈஐடி பாரி குரும்பூர் சர்க்கரை ஆலையின் சார்பில் விவசாயிகளுக்கு கரும்பு மகசூலில் மேம்பாடு உத்திகள் என்கிற தலைப்பில் பயிற்சி நடந்தது. பயிற்சியினை ஈஐடி பாரி குரும்பூர் சர்க்கரை ஆலையின் தலைவர் ராதாகிருஷ்ணன் குத்து விளக்கு ஏற்றி வைத்து துவக்கி வைத்தார். துணைப் பொது மேலாளர் புண்ணியமூர்த்தி வரவேற்றார். கரும்பு மகசூல் மேலாளர் சிவராமன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியை ஆலையின் தலைவர் ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்து பேசியதாவது: நவீன தொழில் நுட்ப உத்திகளைக் கொண்டு கரும்பு சாகுபடியில் அதிக விளைச்சல் மகசூல் காண்பதற்கு ஆலையின் சார்பில் இலக்கு வைக்கப்பட்டு அதற்கான செயல் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. அதற்காக குரும்பூர் சர்க்கரை ஆலைக்கு

உட்பட்ட வட்டங்களான ஆலங்குடி, புதுக்கோட்டை, அண்டக்குளம், வெட்டன்விடுதி, பட்டுக்கோட்டை, ஆவணம், அறந்தாங்கி, குரும்பூர், வல்லத்திராகோட்டை ஆகிய வட்டங்களில் இருந்து தலா 25 முன்னோடி விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மேலும் கரும்பு சாகுபடியில் அதிக லாபம் பெறும் உத்திகளை விளக்குவதற்காக இந்தப் பயிற்சி நடத்தப் படுகிறது என்றார்.

தொடர்ந்து மகாராஷ்டிராவில் இருந்து வந்து பயிற்சி அளித்த டாக்டர் அப்சோ பேசினார்.

**தீவனப்புல் வளர்க்க ரீ12 ஆயிரம் மானியம் வேளாண் அலுவலர்கள் தகவல்**

வலங்கைமான், : தீவனப்புல் வளர்க்க ஏக்கருக்கு ரூ.12 ஆயிரம் மானியம் வழங்கப்படும் என்று உழவர் பெருவிழாவில் வேளாண் அலுவலர்கள் தெரிவித்தனர்.

வலங்கைமான் அடுத்த தெற்குப்பட்டம் ஊராட்சியில் உழவர் பெருவிழா நடந்தது. ஊராட்சி தலைவர் புனிதவதி துவக்கி வைத்தார்.

வேளாண்மை பொறி யில் துறை இளநிலை பொறியாளர் பாலசுப்பிரமணியன், வணிகத்துறை உதவி அலு வலர் ஞானசேகரன், தோட்டக்கலைத்துறை உதவி வேளாண் அலுவலர் சண்மு கம், கால்நடைத்துறை மருத்துவர் கார்த்திக் உள்ளிட்ட பல்வேறு துறை யை சார்ந்த அலுவலர்கள் தங்கள் துறை கள் மூலம் செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து எடுத்துக் கூறினர்.

தற்போது நிலவி வரும் வறட்சியில் கால்நடைகளுக்கு போதிய தீவனங்கள் கிடைப்பதில்லை. எனவே அதை தவிர்க்கும் பொருட்டு தீவனப் புல் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.12 ஆயிரம் மானியத்துடன் தீவனப்புல் வளர்த்து பயன டைய கேட்டுக்கொண்டனர். தமிழக அரசு மூலம் வறுமைக் கோட் டிற்கு கீழ் வாழும் பயனாளிகளுக்கு விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் ஆடுகள் வழங்கப்பட்டு வருகிறது. கால்நடைகளுக்கு கால் நடைத் துறையின் மூலம் இலவசமாக கோமாரி தடுப்பூசி போடப்பட்டு வரு கிறது. 21 நாட்கள் கழித்து ரத்தப் பரிசோதனை செய்யப்படுகிறது என கால்நடை மருத்துவர் கார்த்திக் கூறி னார். விழாவில் துணை வேளாண் அலுவலர் ரவிச்சந்திரன் மற்றும் சீனிவாசன், இளையராஜா, மாணிக்க வாசகம், மணிமாறன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**நாகை மாவட்டத்தில் மத்திய குழுவினர் ஆய்வு விவசாயிகளிடம் குறை கேட்டனர்**

நாகை, : நாகை மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்ட மத்திய குழுவினர், விவசாயிகளிடம் குறைகளை கேட்டனர். டெல்டாவில் ஆய்வு மேற்கொண்டுள்ள மத்திய குழுவினர் 2வது நாளான நேற்று நாகை மாவட்டத்தில் ஆய்வு செய்தனர். Ôநாகை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கடும் குடிநீர் தட்டுப்பாடு உள்ளது. நாகை நகராட்சியின் மொத்த மக்கள்தொகை 1,02,813. நாகை நகராட்சிக்கு ஒரு நாளைக்கு 92,50,000 லிட்டர் தண்ணீர் தேவை. ஆனால், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 45 லட்சம் லிட்டர் தண்ணீரை மட்டுமே வழங்கி வருகிறது. இதனால்

நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளிலும் 180 கைப்பம்புகள் போடப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் வறட்சியை சமாளிக்க நாகை ரயிலடி தெரு, மறைமலை நகர், ஹவுசிங் போர்டு, கலெக்டர் அலுவலகம் ஆகிய இடங்களில் உள்ள பழமையான திறந்தவெளி உறை கிணறுகளை தூர் வாரி அந்த தண்ணீரை குடிக்கலாம் என நிபுணர்கள் சான்று அளித்த பின்னர், திறந்த வெளி உறை கிணறுகளை மேம்படுத்தி தண்ணீர் சப்ளை செய்யும் திட்டமிடப்பட்டுள்ளதுÕ என மத்திய குழுவிடம் அதிகாரிகள் தெரிவித்தனர். கீழையூர் ஊராட்சியில் உறைகிணறு அமைத்து அதன் மூலம் தண்ணீர் எடுக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள கைப்பம்புகளில் தண்ணீர் குடிப்பதற்கு ஏதுவாக உள்ளதா என ஆய்வு செய்தனர்.
தொடர்ந்து கீழையூர் ஊராட்சியில் பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணி நடைபெறுவதை பார்வையிட்டு வருகை பதிவேட்டை ஆய்வு செய்தனர். மணக்குடி ஊராட்சியில் தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட பதிவேட்டை ஆய்வு செய்து தொழிலாளர்களிடம் குறைகளை கேட்டறிந்தனர். மணக்குடி ஊராட்சியில் நடைபெற்று வரும் கால்நடை மருத்துவ முகாமை பார்வையிட்ட மத்திய குழுவினரிடம், Ôதமிழக அரசு உழவு மானியம் உள்ளிட்ட பல்வேறு மானியங்களை வழங்கியதுடன் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15 ஆயிரம் வழங்கி உள்ளது. ஆனால், இத்தொகை போதுமானதாக இல்லை. எனவே விவசாயிகளின் அனைத்து விவசாய கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும்Õ என்று விவசாய சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர். பின்னர் நீர்முளை தொடக்க வேளாண். கூட்டுறவு கடன் சங்கம், அதனுடன் இணைந்த பல்பொருள் அங்காடி ஆகியவற்றை பார்வையிட்டனர். அருகில் உள்ள ரேஷன் கடையில் பொதுவிநியோகத்திட்ட பொருட்களான அரிசி, பருப்பு, உளுந்து, சர்க் கரை ஆகியவை தரமாக இருக்கிறதா என ஆய்வு செய்து, பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்தனர். மத்திய குழுவினருடன் தமிழக அரசின் வருவாய் நிர்வாக முதன்மை செயலர் ராஜீவ் ரஞ்சன், வேளாண். துறை முதன்மை செயலர் சந்தீப் சக்சேனா, ஊரக வளர்ச்சித்துறை ஆணையர் விஜயகுமார், பேரூராட்சிகளின் இயக்குனர் செல்வராஜ், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிகளின் தனி அலுவலர் சிவனருள் வந்தனர். நாகை கலெக்டர் முனுசாமி, டிஆர்ஓ ஆசியா மரியம் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் உடன் சென்றனர்.

**உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு காய்கறி உற்பத்தி தொழில்நுட்ப விளக்கம்**

ஜெயங்கொண்டம், : ஜெயங்கொண்டம் அருகே உள்ள அங்கராயநல்லூரில் உழவர் பெருவிழா நடைபெற்றது. விழாவில் ஜெயங்கொண்டம் வேளாண்மை உதவி இயக்குனர் இளங்கோவன், வேளாண் திட்டங்களில் உள்ள மானியங்கள் குறித்தும், வேளாண்மை துணை அலுவலர்கள் கலைச்செல்வி, பொய்யாமொழி ஆகியோர் எலி ஒழிப்பு, திருந்திய நெல் சாகுபடி, கோடை உழவு, மண்மாதிரி எடுத்தல், விதைநேர்த்தி செய்தல் குறித்து விளக்கம் அளித்தார்.

தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் பெருமாள், தமிழருவி ஆகியோர் காய்கறி உற்பத்தியில் தொழில்நுட்பம் குறித்து பேசினர். வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை அலுவலர் நல்லகுமார் முந்திரி, கடலை, எள் பயிர்கள் தரம் பிரிப்பது குறித்து பேசினார். விதைச்சான்று அலுவலர் காசிநாதன், விதைகள் தேர்வு செய்வது குறித்து விளக்கமளித்தார். விழாவிற்கான ஏற்பாடுகளை உதவி அலுவலர்கள் கோவிந்தராஜ், ஆதிநாராயணன், முருகன், ராஜா ஆகியோர் செய்திருந்தனர். உதவி அலுவலர் சுப்ரமணியன் நன்றி கூறினார்.

**மின்வெட்டால் விவசாயமும் கைவிட்டது நாங்குநேரி தாலுகாவில் கடும் வறட்சி பிழைப்பு தேடி ஊரை காலி செய்யும் அவலம்**

நாங்குநேரி, : நாங்குநேரி தாலுகாவில் கடுமையான வறட்சி நிலவுவதால் ஏராளமானோர் சொந்த ஊரை காலி செய்து பிழைப்பு தேடி வெளியேறி வருகின்றனர். நாங்குநேரி தாலுகாவில் விவசாயம் பிரதான தொழி லாக இருந்து வருகிறது. தற்போது விவசாயத்தில் போதிய வருவாய் இல்லாததாலும், மின் வெட்டாலும் விவசாயம் முழுவதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஏராளமாக செலவு செய்து பயிரிட்ட ஆயிரக்கணக் கான வாழைகள் காற்றில் முறிந்து விழுந்ததால் சந்தைகளில் வாழைத்தார் வரவு அதிகரித்துள்ளது. இதனால் வாழைத் தாருக்கு போதிய விலை கிடைக்காமல் விவசாயிகள் நஷ்டம் அடைந்துள்ளனர். இருப்பினும் பெட்டிக்கடைகளில் வாழை பழத்தின் மவுசு குறையவில்லை. இதேபோல் விவசாயிகள் பயிரிட்ட பல்வேறு பயிர்களுக்கு தொடர்ந்து போதிய விலை கிடைக்காமல் போனதால் விவ சாயம் செய்ய ஆர்வமின்றி விளை நிலங்களை தரிசாக விட்டுள்ளனர். இதனால் விவசயிகள் மற்றும் தொழிலாளர்கள் வாழ்வாதார இழப்பிற்கு உட்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நாங்கு நேரி, பரப்பாடி, மூலைக்கரைப்பட்டி, முனைஞ்சிப்பட்டி, களக்காடு, ஏர்வாடி உள்ளிட்ட பகுதி களை சுற்றியுள்ள கிராமங்களிலும் விவசாயத்தை தவிர வேறு தொழில்களோ, வேலை வாய்ப்புகளோ இல்லாத நிலையில் இப்பகுதிகளை சேர்ந்த விவசாயி கள் உள்பட ஏராளமா னோர் பிழைப்புத்தேடி கோவை, ஈரோடு, திருப்பூர், சென்னை மும்பை ஆகிய பகுதிகளுக்கு புலம் பெயர்ந்து வருகின்றனர். இதுகுறித்து ஈரோடு அருகேயுள்ள சித்தோடு அமராவதிநகரில் மளிகைக்கடை நடத்தி வரும் நாங்குநேரி தாலுகா பரப்பாடியைச்சேர்ந்த ராஜ்(63) கூறு கையில்: "‘கடந்த 6 ஆண்டுகளுக்கு முன் நாங்கள் குடும்பத்துடன் சித் தோடு அமராவதிநகர் பகுதியில் குடியேறி மளிகை கடை நடத்தி வருகி றோம். பரம்பரை யாக செய்து வந்த விவசாயத்தையும், நிலங்களையும், பனைத்தொழிலையும் அப்படியே விட்டுச் சென்றோம். தற் போது அங்கு மின்தடை யால் பல தொழிற்சாலை கள் மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் வேறு இடங்களுக்கு சென்று விட்டனர். இதனால் எங்க ளுக்கு பலசரக்கு வியா பாரம் குறைந்து போதிய வருமானம் இன்றி பாதிக்கப்பட்டுள்ளோம். விவசா யம் கைவிட்ட நிலை யில் தொழிலை நம்பி இருந்த எங்களுக்கு வருமானம் குறைந்து வருவ தால் எதிர்காலத்தை நினைத்து குழப்பத்தில்

உள்ளோம். நாங்குநேரி தொழிற்பூங்காவை பெரிதாக எதிர்பார்த்து 13 ஆண்டுகள் கடந்தும் எந்த பலனும் அளிக்கவில்லை“ என்றார். மேலும் தினந்தோறும் ஏராளமானோர் மும்பை திருவனந்தபுரம் போன்ற பெரும் நகரங்களுக்கு சிறு முதலீட்டில் இட்லி, தோசை, வடை சுட்டு வியாபாரம் செய்யும் எண்ணத்தில் ரயில் மூலம் சென்று கொண்டிருக்கின்றனர். இதனால் நாங்குநேரி ரயில் நிலையத்தில் மூட்டை முடிச்சுகளுடன் வரும் பயணிகள் கூட்டம் அதிகரித்து வருகிறது. இதனை தவிர்க்க நாங்குநேரியில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்பூங்காவை திறக்க நடவடிக்கை எடுக்க வேண் டும். மேலும் இந்த பகுதியில் புதிய தொழிற்சாலைகளை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் காலப்போக்கில் நாங்குநேரி தாலுகாவே ஆளில்லாத பகுதியாக மாறிவிடும் என்று இப்பகுதி மக்கள் வருத்தத்துடன் தெரிவிக்கின்றனர்.